இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 59 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 21 – ஞாயிற்றுக்கிழமை 08 அக்டோபர் 2023 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 59 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 21 - Sunday 08 October 2023 - Madurai 10 Pages ₹ 5.00

## தமிழ் மொழி - தமிழினம் - தமிழ்நாட்டுக்கும் - இந்தியா முழுமைக்கும்

# சமூக நீதியைக் காக்க எனது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைக்கிறேன்!

## தஞ்சையில் திராவிடர் கழகம் நடத்திய பாராட்டு விழாவில் “தாய் வீட்டில் கலைஞர்” நூலினை வெளியிட்டு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு உரை!

தஞ்சை, அக். 8 –

**தி.க.வும் தி.மு.க.வும் உயிரும் உணர்வும் போல! உயிரும் உணர்வும் இணைந்து உடல் இயங்குவது போல இந்த இனத்தின் உயர்வுக்காகத் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்! என்றும், தமிழ்மொழி தமிழினம் தமிழ்நாட்டைக் காக்க இந்தியா முழுமைக்கும் சமூகநீதியைக் காக்க எனது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைத்துக் கொள்கிறேன்! எனவும் தஞ்சையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

தஞ்சாவூரில் திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்று முன்தினம் (06.10.2023) மாலை நடைபெற்ற ‘முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா – சமூக நீதிக்கான சரித்திர நாயகர் தமிழ்நாடு முதல்வர் மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தொகுத்துள்ள “தாய்வீட்டில் கலைஞர்” நூலினை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்புரை ஆற்றினார்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய ஏற்புரை வருமாறு:–

“பாராட்டிப் போற்றி வந்த பழமைலோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்” என்று தந்தை பெரியார் அவர்களைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி இருந்தார்கள்.

அந்த உரிமைக்குரிய அத்தகைய பகுத்தறிவுப் பகலவன் நம்முடைய தந்தை பெரியார் அவர்களின் திராவிடர் கழகம்தான், தலைவர் கலைஞருக்கு தாய் வீடு – என்ற புத்தகத்தை வெளியிடும் நிகழ்ச்சி இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### “சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின்!”



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (6.10.2023) தஞ்சாவூர், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அரங்கில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் “சமூகநீதிக்கான சரித்திர நாயகர்” பட்டத்தை வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், எஸ்.கல்யாணசுந்தரம், செ.இராமலிங்கம், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், நா.அசோக்குமார், பூண்டி கலைவாணன், கா.அண்ணாதுரை, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம்.அக்பர் அலி, மேற்கு வங்க மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி.பாலச்சந்திரன், தஞ்சை மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார், திராவிடர் கழக செயலவைத் தலைவர் அறிவுக்கரசு, பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் மற்றும் திராவிடர் கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தலைவர் கலைஞருக்கு மட்டுமல்ல;**
**எனக்கும் தாய்வீடு திராவிடர் கழகம்!**

தலைவர் கலைஞருக்கு தாய்வீடு – இது மிகமிக பொருத்தமான தலைப்பு. தலைவர் கலைஞருக்கு மட்டுமல்ல; எனக்கும் திராவிடர் கழகம்தான் தாய்வீடு.

‘தாய்வீட்டில் கலைஞர்’ என்ற நூலை வெளியிடுவதற்காக மட்டுமல்ல; ‘நானும் என் வீட்டுக்குச் செல்கிறேன்’ என்ற உணர்வோடுதான் இந்த மேடைக்கு வந்திருக்கிறேன்.

**என்னை என்றும் காப்பவர்;**
**காத்தவர் அய்யா ஆசிரியர்!**

அதிலும் குறிப்பாக, திராவிடர் கழகத் தலைவர் அய்யா ஆசிரியர் அவர்கள் அழைத்தால், எங்கும், எப்போதும், எந்த நேரத்திலும் செல்வேன். காரணம், என்னைக் காத்தவர் – இன்றைக்கும் காத்துக் கொண்டிருப்பவர். அதிலும் குறிப்பாக, மிசா காலத்தில், அந்த இருட்டறையில் எனக்கு தைரியம் கொடுத்தவர்தான் அய்யா ஆசிரியர் அவர்கள்.

‘தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் இல்லாத இந்த நேரத்தில் எனக்கு ஆறுதலாக இருப்பவர் ஆசிரியர் வீரமணிதான்’ என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் இவர்களோடு, தலைவர் கலைஞர் அவர்களும் இல்லாத நேரத்தில் எனக்கு கொள்கை வழிகாட்டியாக இருப்பவர், அய்யா ஆசிரியர் அவர்கள்தான்!

அதனால்தான், ‘நான் போக வேண்டிய பாதையைத் தீர்மானிப்பது பெரியார் திடல்தான்’ என்பதை நான் குறிப்பிட்டிருக்கிறேன். இதைத்தான் நேற்றும் சொன்னேன்; இன்றும் சொல்கிறேன்; நாளையும் சொல்வேன்!

**தி.க.வும் - தி.மு.க.வும்**
**உயிரும் உணர்வும் போல!**

திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள், ‘திராவிடர் கழகத்துக்கு போட்டியாக அல்ல. அதே கொள்கையை வேறொரு பாணியில் சொல்வதற்காகத்தான். அந்தக் கொள்கையைச் செயல்படுத்திக் காட்டுவதற்காகத்தான்’ என்று மிக தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். தி.க.வும் தி.மு.க. வும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தி.க.வும் தி.மு.க.வும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று சொன்னார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

**தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறிய மாநிலமாக மட்டுமல்ல, தன்னிறைவு பெற்ற மாநிலமாக உயர வேண்டும். இந்திய ஒன்றிய அரசின் ஆட்சிக் கருத்தியலாக, கூட்டாட்சிக் கருத்தியல் மலர வேண்டும். அனைத்து தேசிய இனங்களும் உரிமை பெற்றவைகளாகவும், அனைத்து மாநில மொழிகளும் ஒன்றிய ஆட்சி மொழியாக உயர்ந்து நிற்க வேண்டும். அனைவர் குரலுக்கும் ஒரே மரியாதையும் மதிப்பும் இருக்க வேண்டும். இதுதான் இந்திய ஒன்றியமும் அதில் உள்ளடங்கிய தமிழ்நாடும் இயங்க வேண்டிய முறை! அத்தகைய கூட்டாட்சிக் கருத்தியலை உள்ளடக்கிய இந்தியாவை அமைப்பதற்காகவே இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.**

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## அதானி குழுமத்துக்கு

# நற்சான்றிதழ் தர செபிக்கு என்ன அழுத்தம் தரப்பட்டது?

## பங்குச்சந்தை மோசடி விவகாரம் குறித்து காங்கிரஸ் கேள்வி!

புதுடெல்லி, அக். 8 -

அதானி குழுமத்துக்கு நற்சான்றிதழ் தர செபிக்கு என்ன அழுத்தம் தரப்பட்டது? என காங்கிரஸ் கேள்வி எழுப்பி உள்ளது.

அதானி குழும நிதி கையாளுதல்கள் குறித்து கடந்த 2014ம் ஆண்டில் வருவாய் புலனாய்வு இயக்குநரகம் விடுத்திருந்த எச்சரிக்கை உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) மறைப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அதானி குழுமத்துக்கு நற்பெயர் கொடுக்க செபிக்கு எத்தகைய அழுத்தம் தரப்பட்டது? என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

2014ஆம் ஆண்டில் அதானி குழுமம் சந்தை விலைக்கு மாறாக மின் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை அதிக விலைக்கு வாங்கியுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட 8 ஆயிரத்து 320 கோடி ரூபாயை விநோத் அதானியின் கூட்டாளிகளான சாங் சுங்லிங் மற்றும் நாசர் அலி ஷபான் ஆகியோர் மொரிஷியஸ் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்சைச் சேர்ந்த நிறுவனங்கள் மூலம் கையாண்டுள்ளனர்.

2016 ஜூன் 16ஆம் தேதியில் 8 முதல் 14 சதவீதம் பினாமி சொத்துகள் மொரிஷியஸ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகளில் உள்ள ஷெல் நிறுவனங்கள் வாயிலாக முதலீடு செய்யப்பட்டன.

இதுகுறித்த வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டது ஏன்? இவை அனைத்தும், 2022ல் அதானி குழுமம் கைப்பற்றிய ஒரு செய்தி ஊடகத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்ட யு.கே. சின்ஹா, 2014ல் செபியின் இயக்குநராக பதவி வகித்தபோது தற்செயலாக நடந்ததா? என ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதானி பங்குச் சந்தை மோசடி குறித்து முழு உண்மையும் நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை மூலம் மட்டுமே வெளிப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!

# இந்த மாதம் 14ஆம் தேதி வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக். 8 -

வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரமாக கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை திராவிட மாடல் அரசு தொடங்கியுள்ளது.

ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் கடந்த மாதம் 15ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு, ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி வங்கிக் கணக்கில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் இந்த மாதம் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஒருநாள் முன்னதாக 14ஆம் தேதியே வங்கி கணக்குகளில் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்த தமிழ்நாடு அரசின் அறிவிப்பு வருமாறு:-

**அக்.14ல் உரிமைத்தொகை வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.**

வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரமே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை. ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் செப்டம்பர் 15 ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு, ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி வங்கிக் கணக்கில், உரிமைத் தொகை செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த மாதம் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஒருநாள் முன்னதாக 14ஆம் தேதியே வங்கிக் கணக்குகளில் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### இவ்விருது தங்களின்

# கொள்கைப் பிடிப்பை மேலும் உறுதியாக்கும்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச் செல்வன் கடிதம்!

**அன்புச் சகோதரர், தலைவர் ஸ்டாலின் அவர்களே,**

**அன்பான வணக்கம்,**



நமது தாய்க் கழகமான திராவிடர் கழகம் தஞ்சையில் நடத்திய முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது, கலைஞரது பன்முகத்தன்மைக்குக் கிட்டிய "நோபல் பரிசுக்குச்" சமமானது.

தாய்க்கழகம் நடத்திய இவ்விழாவில் திராவிட மாடல் நாயகரான தங்களுக்கு "சமூக நீதிக்கான சரித்திர நாயகர்" என்ற நல் ஆளுமை விருதை வழங்கி தங்களை கௌரவித்தது மெத்தப் பொருத்தமானது. விருது பெற்றமைக்கு வாழ்த்துகள்.

அந்த விருதினைப் பெற்றுக்கொண்டு தாங்கள் ஆற்றிய கொள்கை உரை மிகவும் போற்றத்தக்க வகையில் அமைந்தது. இவ்விருது, தங்களின் கொள்கைப் பிடிப்பை மேலும் மேலும் வளர்க்கும், உறுதியாக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

சரித்திர நினைவுகளை எடுத்துக்கூறியது, இளைய தொண்டர்கள் இயக்கத்தின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும்.

**நமது கழகம் ஆரம்பித்த அன்று அறிஞர் அண்ணா தனது பேச்சில் இரண்டு விஷயங்களை, தொண்டர்களுக்கும், தமிழகத்திற்கும் உறுதிபடத் தெரிவித்தார், முதலாவது "தாம் கொண்டதும், கண்டதும், ஏற்றுக் கொண்டதும் ஒரே தலைவர் தந்தை பெரியார்" என்றும், அதனைத் தொடர்ந்து "தி.க.வும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகத் திகழும்" என்று உறுதிபடத் தெரிவித்தார். அவரின் கூற்றை நிரூபிக்கும் வகையில் தாங்கள் தி.க.வும், தி.மு.க.வும் உயிரும், உணர்வும் போன்றது என்று பேசியது அருமையிலும் அருமை.**

1967 ஆம் ஆண்டு கழகம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் முன்னர், திருச்சியில் தங்கியிருந்த தந்தை பெரியாரை, தனது தம்பிகளுடன் சென்று அவரைச் சந்தித்து அவரது ஆசியைக் கோரிவிட்டு "இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்கு காணிக்கை" என்று அறிஞர் அண்ணா அறிவித்தது போன்றே, திராவிட மாடல் ஆட்சிதான் தந்தை பெரியார், தந்தை பெரியார்தான் "திராவிட மாடல் ஆட்சியை ஆள்கிறார்" என்று தாங்கள் தெரிவித்தது கழகத்தின் கொள்கைப் பிரகடனம்.

தங்களது உரையில் ஒன்றிய அரசின் தீய உள் நோக்கங்களை, குறிப்பாக பாடுபட்டுப் பெற்ற இட ஒதுக்கீடு கொள்கைகள் எதிர் நோக்கும் ஆபத்துகளை, தமிழ்நாட்டின் நாடாளுமன்ற இடங்களைக் குறைக்க முயலும் செயல்களை தோலுரித்துக் காட்டியது மிகவும் அவசியமானது.

எதிர் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான INDIA கூட்டணியை, கொள்கைக் கூட்டணி என்று வர்ணித்தது, கூட்டணியின் நோக்கத்தை மக்கள் நலன் சார்ந்தது என்று முரசொலித்தது சிறப்பு.

விருது பெற்றமைக்கு மீண்டும் வாழ்த்துகள், விருது அளித்து கௌரவித்த தாய்க்கழகத்திற்கும், ஆசிரியர் அய்யா அவர்களுக்கும் நன்றி, நன்றி.

வாழ்க, வெல்க தங்களின் சீரிய தமிழர் தொண்டு.

வெல்க INDIA கூட்டணி.

நட்புடன்,

**அ.அன்புச்செல்வன்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (7.10.2023) தலைமைச் செயலகத்தில், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலை குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.10.2023) முகாம் அலுவலகத்தில், முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் முனைவர் இரா.திருநாவுக்கரசு, எழுதிய "தன்னிலை உயர்த்து" என்ற நூலின் ஆங்கில மொழிப்பெயர்ப்பான "Best of You" என்ற நூலினை வெளியிட்டார். உடன் காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை தலைவர் (நுண்ணறிவு) டாக்டர் க.அ.செந்தில்வேலன், காவல்துறை துணைத் தலைவர் (நுண்ணறிவு) க.ராஜேந்திரன், குயின் மிரா சர்வதேச பள்ளியின் மேலாண்மை இயக்குநர் அபினாத் சந்திரன் மற்றும் முனைவர் இரா.திருநாவுக்கரசு அவர்களின் மனைவி திருமதி லாவண்ய ஷோபனா ஆகியோர் உள்ளனர்.

### 'நான் முதல்வன்' திட்டத்தில் இலக்கை தாண்டி பயிற்சி!

# தமிழ்நாட்டைத் தேடி வரும் வெளிநாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, அக்.8-**

**'நான் முதல்வன்' திட்டத்தில் ஓர் ஆண்டில் 10 இலட்சம் பேருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற இலக்குடன் ஆரம்பித்து இன்று 13 இலட்சம் இளைஞர்களுக்கு இலக்கை தாண்டி பயிற்சி அளிக்கிறோம் என்றும் தமிழ்நாட்டைத் தேடி வரும் வெளிநாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்து வருகிறது என்றும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 1200 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்று தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்ற மாணவ மாணவிகள் ஆயிரத்து 200 பேருக்கு பணி நியமன ஆணைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கினார்.**

கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுள்ள சுமார் 1,200 இளைஞர், இளம் பெண்களுக்கு இன்று பணி நியமன கடிதங்கள் வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதற்கு முன்பு, கடந்த ஜூன் மாதம் இதே 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாமின் மூலம் வேலைவாய்ப்பினை பெற்ற ஆயிரத்து 425 இளைஞர்களுக்கு சென்னை பல்கலைக்கழகத்தில் பணி நியமன கடிதங்களை வழங்கினோம். இப்போது நான்கு மாதங்களுக்குள்ளாகவே மீண்டும், அதே மாதிரியான ஒரு சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

**1200 குடும்பத்தார் வாழ்வில் ஒளி!**

இன்றைக்கு ஆயிரத்து 200 பேருக்குப் பணி நியமன கடிதங்களைக் கொடுக்கின்றோம் என்றால், இது வெறும் தனிநபர்களுக்கான பணி நியமன ஆணை கிடையாது. ஆயிரத்து 200 குடும்பங்கள் வாழ்வில், இந்த 'நான் முதல்வன்' திட்டம் ஒளி ஏற்றி வைத்துள்ளது என்று அர்த்தம்.

இன்றைய சூழலில் பணிவாய்ப்பு என்பது எவ்வளவு அவசியம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதை உணர்ந்து இந்த வேலை வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**முதல்வர் துவக்கிய 'நான் முதல்வன்' திட்டம்!**

குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே கிடைத்த கல்வியை அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் சென்றடையச் செய்தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கல்வியில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. நம் மாநில மாணவ மாணவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று படித்த காலம் போய், வெளிமாநில, வெளிநாட்டு மாணவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து படிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியவர்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கல்வியில் மட்டுமின்றித் தொழில் வளர்ச்சியிலும் தமிழ்நாட்டைப் பல்வேறு உயரங்களுக்குக் கூட்டிச் சென்றவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ள 1,200 மாணவ, மாணவியருக்குப் பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் (06.10.2023) கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறைச் செயலாளர் தாரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கலைஞரின் வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசும் செயல்பட்டு வருகின்றது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டுதான், இந்த 'நான் முதல்வன்' திட்டம். படிக்கின்ற இளைஞர்கள் ஒவ்வொருவரையும் அவரவர் துறையில் முதல்வர் ஆக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துவங்கி வைத்த திட்டம்தான் 'நான் முதல்வன்' திட்டம்.

**இலக்கை தாண்டி பயிற்சி!**

இந்தத் திட்டத்தின் கீழ் ஓராண்டில் 10 இலட்சம் பேருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற இலக்குடன் ஆரம்பித்து, இன்று அந்த இலக்கைத் தாண்டி 13 லட்சம் இளைஞர்களுக்கு நாம் பயிற்சி அளித்திருக்கின்றோம். 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் 61 ஆயிரத்து 921 பொறியியல் மாணவர்கள், வேலை வாய்ப்பை பெற்றுள்ளார்கள். இதில் அதிகபட்சமாக வருடத்திற்கு 40 லட்சம் ஊதியத்துடன் மாணவர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

கலைக்கல்லூரிகளைப் பொறுத்தவரை இதுவரை 57 ஆயிரத்து 312 மாணவர்கள் வேலைவாய்ப்பை பெற்றுள்ளார்கள். இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில், ஆண்டு ஊதியமாக ரூபாய் 2 லட்சத்தில் தொடங்கி ரூபாய் 29 லட்சம் வரை பெறக்கூடிய வகையில் பணிநியமான கடிதங்களை உங்களுக்கு நாங்கள் வழங்கியுள்ளோம். வளர்ந்து வரும் தொழில்நுட்பத் தேவைக்கு ஏற்ப தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் திறன் பயிற்சிகளை வழங்கி, அதன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெருக்கவே இந்த 'நான் முதல்வன்' திட்டம் தொடங்கப்பட்டது.

முதலில் பொறியியல் கல்லூரிகளில் மட்டுமே இந்தத் திட்டத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதனுடைய தேவையை உணர்ந்து கலை, அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள் என அனைத்துக் கல்வி நிலையங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

**இந்தியா முழுவதும் வரவேற்பை பெற்ற திட்டங்கள்!**

முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த, 'காலை உணவுத் திட்டம்', 'மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம்', 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்', 'புதுமைப்பெண் திட்டம்' ஆகியவையெல்லாம் எப்படி தமிழ்நாடு மட்டுமின்றி, இந்தியா முழுவதும் வரவேற்பைப் பெற்று வருகின்றதோ, அதுபோலவே, இந்த 'நான் முதல்வன்' திட்டமும் இந்தியா முழுவதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக சமீபத்தில் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களில் 'டி.சி.எஸ்', 'சேல்ஸ் ஃபோர்ஸ்', 'டி.பி.எஸ்', 'ஃபாக்ஸ்கான்', 'சதர்லேண்ட்', 'டெக் மகிந்திரா', 'அசோக் லேலாண்ட்', 'சுந்தரம் பிரேக் லைனிங்ஸ்', 'யூனிடெக்'போன்ற முன்னணி நிறுவனங்களிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பணிவாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

'நான் முதல்வன்' திட்டம் தொடங்கப்பட்டு முதலாம் ஆண்டு இறுதியில் பல்வேறு ஊர்களில் வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. கல்லூரியில் மட்டுமின்றி, தனியாக பொது இடங்களிலும் முகாம்கள் அரசால் நடத்தப்பட்டன. அதிக மாணவர்கள் பயன்படும் வகையில் பல முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து வருடம் தோறும் இது மாதிரியான வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ச்சியாக நடத்த உள்ளோம்.

முன்னணி நிறுவனங்களில் எச்.ஆர் ரெப்பரசன்டேட்டிவ்ஸ் மற்றும் ஜாப் மார்க்கெட்ல் உள்ள முக்கிய நபர்களுடன் செய்யப்பட்ட கலந்துரையாடல் அடிப்படையில், தனியார் துறையில் உள்ள வேலைவாய்ப்புத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே முதன்முறையாக கல்லூரி சிலபஸில் உள்ள ஒரு பகுதியாகவே பணிவாய்ப்பைப் பெறுவதற்கான திறனை வளர்த்துக்கொள்ள சாஃப்ட் ஸ்கில்ஸ் மற்றும் எம்பிளாய்மென்ட் ஸ்கில்ஸ் சார்ந்த பயிற்சிகள்தான் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன.

**கல்லூரிகளில் மென் திறன் பயிற்சி!**

பிரபலமான கல்லூரிகள் முக்கிய நகரங்களில் உள்ள கல்லூரிகள் மட்டுமில்லாமல், தமிழ்நாட்டில் உள்ள சிறு நகரங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள கல்லூரிகளிலும் இந்த மென் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் எந்த மாதிரியான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்பதை அறிந்துகொள்ள தொழில் துறை மற்றும் கல்வி நிறுவனங்களின் கூட்டுச் செயல்பாடுகள், இண்டஸ்ட்ரி அகாடமி ஆஃப் கொலாபரேஷன் மிக மிக அவசியம். எனவேதான் தொழில் நிறுவனங்கள், துறைசார்ந்த வல்லுநர்கள், உயர்கல்வி நிறுவனங்கள் போன்ற துறை சார்ந்த அமைப்புகளின் ஆலோசனைப்படி 'நான் முதல்வன்' திட்டத்திற்கான பாட முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இன்றைய சூழலில் வேலைவாய்ப்பை தரக்கூடிய ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ், ஃபின் டெக், பிக் டேட்டா, மெட்டா வெர்ஸ், டெக்ஸ்டைல் டெக்னாலஜி, ஃபுட் ப்ரிசர்வேஷன் டெக்னாலஜி, டூரிசம் மற்றும் ஹாஸ்பிட்டாலிட்டி போன்ற துறை சார்ந்த பாடத்திட்டங்கள் உங்களுக்குப் பெரிதும் பலன் அளித்துள்ளன.

**வெளிநாட்டு நிறுவனங்கள் வருகை அதிகரிப்பு!**

இத்தகைய முயற்சியால் முதலீடு செய்வதற்காக தமிழ்நாட்டைத் தேடி வரும் வெளிநாட்டு நிறுவனங்களுடைய எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்துள்ளன. குறிப்பாக அந்நிறுவனங்கள் தமிழ்நாட்டை ஸ்கில்டு வொர்க் ஃபோர்ஸை கொண்ட மாநிலமாகப் பார்க்கின்றனர் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்தெந்த துறையில் என்னென்ன வாய்ப்புகள் உள்ளன என்பது தொடர்பாக நம்முடைய இளைஞர்களுக்கு வழிகாட்டுவதற்காக டி.சி.எஸ் அயான் நிறுவனத்துடன் இணைந்து ஓர் உயர்கல்வி வழிகாட்டுதல் திட்டத்தைச் செயல்படுத்த இன்றைய தினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டி.சி.எஸ்அயான் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதன் மூலம் 'நான் முதல்வன்' திட்டம் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு கல்லூரியிலும் அந்தந்தப் படிப்புகளுக்கேற்ற திறன் படிப்புகள் கண்டறியப்பட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. அரசுத் துறையில் வேலைவாய்ப்பினை வழங்கவும், 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**பயிற்சி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை!**

குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாட்டு இளைஞர்கள் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எஃப்.எஸ், ஐ.ஆர்.எஸ் போன்ற ஒன்றிய அரசுப் பணிகளுக்கு வரவேண்டும் என்பதற்காக, 'நான் முதல்வன்' போட்டித் தேர்வுப் பயிற்சிகளை கடந்த ஜூன் மாதம் தொடங்கினோம். மேலும் தமிழ்நாடு அரசு நடத்துகின்ற திறன் மதிப்பீட்டுத் தேர்வில் வெற்றி பெறுகின்ற ஆயிரம் மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்கப்பட உள்ளன.

இப்படி தமிழ்நாட்டு இளைஞருடைய வேலைவாய்ப்பை பெருக்க முதலமைச்சர் அவர்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அதன் பலனாக இன்றைக்குப் பணி நியமன கடிதங்களைப் பெற்றுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், என்னுடைய பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய தினம் பணியாளராக வேலைக்குச் செல்லவிருக்கும் நீங்கள் எதிர்காலத்தில் தொழில் முனைவோராக மாறி, மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி சிறப்புத்திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் இன்னசன்ட் திவ்யா ஐ.ஏ.எஸ்., 'நான் முதல்வன்' திட்டத்தின் முதன்மை செயலர் அலுவலர் ஜெயப்பிரகாஷ், 'போட்டித் தேர்வுகள் பிரிவு'ன் மிஷன் டைரக்டர் சுதாகர், இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு தலைவர் சங்கர் வானவராயர் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக பணிநியமன ஆணைகளை பெற்ற மாணவமாணவிகள் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பினை பெற்ற தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.

# தி.க.வும் - தி.மு.க.வும் உயிரும் உணர்வும் போல் இணைந்து தமிழின உயர்வுக்குப் பாடுபடுகிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

என்னைப் பொறுத்தவரையில், தி.க.வும் தி.மு.க.வும் உயிரும் உணர்வும் போல! உயிரும் உணர்வும் இணைந்து உடல் இயங்குவது போலத்தான் நாம் இந்த இனத்தின் உயர்வுக்காகப் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்!

கலைஞருக்கு நூற்றாண்டு விழா நடத்தும் முழுத் தகுதியும் கடமையும் திராவிடர் கழகத்துக்கு உண்டு. திராவிட முன்னேற்றக் கழகம் உதயமாவதற்கு முன்பே, சுயமரியாதை இயக்கத்தின் வீரராக, திராவிடர் கழகத்தின் தீரராக இருந்தவர்தான் கலைஞர் அவர்கள். இன்னும் சொன்னால் பேறறிஞர் அண்ணா அவர்களைச் சந்திப்பதற்கு முன்னதாக தந்தை பெரியாரைச் சந்தித்தவர் கலைஞர் அவர்கள்.

1937ஆம் ஆண்டு திருவாரூர் கமலாலயக் குளக்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தந்தை பெரியாரின் உரையை முதன்முதலாகக் கேட்டதாகவும், அன்றைய தினம் ஆரஞ்சு நிற சால்வை அணிந்து பளபளவென பெரியார் அவர்கள் மின்னியதாகவும் கலைஞர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது இறுதி ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை எழுதாமல், தந்தை பெரியாரின் சுற்றுப் பயண பேச்சைக் கேட்கப் போனதால் தேர்வில் தோற்றுப் போனவர் கலைஞர் அவர்கள்.

**ஈரோட்டுப் பள்ளி - காஞ்சிக் கல்லூரியில் பயின்றவன் என பெருமையாகச் சொன்னவர் கலைஞர்!**

'நான் பள்ளிப் பாடத்தில் தோற்றேன். ஆனால் பெரியாரின் பள்ளிக் கூடத்தில் வெற்றி பெற்றுவிட்டேன்' என்று பெருமைப்பட்டவர் கலைஞர் அவர்கள். "நான் படித்ததெல்லாம் ஈரோட்டுப் பள்ளிக்கூடம் காஞ்சிக் கல்லூரி மட்டும்தான்" என்று பெருமையாக பத்து பல்கலைக்கழகங்களில் டாக்டர் பட்டம் வாங்கியதைப் போன்ற பெருமையோடு சொன்னவர் கலைஞர் அவர்கள்.

அதனால்தான் அவர் படித்த பள்ளிக் கூடத்தின் சார்பில், ஈரோடு குருகுலத்தின் சார்பில், இந்த நூற்றாண்டு விழா நடப்பது மிகமிக பொருத்தமானது. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது மறைவுக்குப் பிறகு, சிலர் குழப்பம் ஏற்படுத்த முனைந்தபோது முதலமைச்சர் பொறுப்பு வேண்டாம் என்று மறுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால் நீங்கள் முதலமைச்சரானால்தான் இயக்கம் காக்கப்படும் தமிழ்நாடு காக்கப்படும் என்று சொன்னவர் தந்தை பெரியார் அவர்கள். அவருக்காக தூது வந்தவர்தான் மானமிகு ஆசிரியர் அவர்கள். அந்த வகையில் கலைஞர் அவர்களை முதலமைச்சர் ஆக்கியவர் தந்தை பெரியார். தலைவர் கலைஞர் அவர்களுக்குத் தலைநகர் சென்னையில் முதன்முதலாகச் சிலை அமைத்தவர் அன்னை மணியம்மையார் அவர்கள்.

இன்றைய தினம் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகப் பிரமாண்டமாக நடத்தி, 'தாய் வீட்டில் கலைஞர்' என்ற களஞ்சியத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார் மானமிகு ஆசிரியர் அவர்கள்.

**தாய் வீட்டில் கலைஞர் என்ற களஞ்சியத்தை உருவாக்கியுள்ள ஆசிரியர்!**

திராவிடர் கழகத்தில்.

★ தந்தை பெரியார்

★ அன்னை மணியம்மையார்

★ மானமிகு ஆசிரியர் அவர்கள் என்றால்

திராவிட முன்னேற்றக் கழகத்தில்,

★ பேரறிஞர் அண்ணா

★ தமிழினத் தலைவர் கலைஞர்

★ இந்த அடியன் என மூன்று சகாப்தங்களாக இணைந்து பணியாற்றி வருகிறோம். கருப்பும் சிவப்பும் இணைந்ததே திராவிட இயக்கம் என்பதைப் போல இணைந்தே இருக்கிறோம். இணைந்தே இருப்போம்!

ஐம்பது ஆண்டுகாலம் ஒரு இயக்கத்தின் தலைவராக இருந்தவர் கலைஞர் அவர்கள். ஐந்து முறை இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் கலைஞர் அவர்கள். அவரது கண்ணசைவில் இந்தியப் பிரதமர்களையும் குடியரசுத் தலைவர்களையும் உருவாக்கியவர் கலைஞர். ஆனால், உங்களை இந்த நாடு எப்படி அடையாளம் காண வேண்டும் என்று கேட்டபோது, "மானமிகு சுயமரியாதைக்காரன்" என்ற ஒற்றை வரியில்தான் தலைவர் கலைஞர் அவர்களின் 95 ஆண்டு கால வாழ்க்கை அடங்கி இருக்கிறது. மானமிகு சுயமரியாதைக்காரன் என்று சொன்ன கலைஞர் அவர்கள், குடியரசு இதழில் எழுதியதும் பெரியார் மேடைகளில் பேசியதும் என தொகுத்து மிகப்பெரிய களஞ்சியமாக தாய்வீட்டில் கலைஞர் என்ற நூலை உருவாக்கிக் கொடுத்துள்ளார் ஆசிரியர் வீரமணி அவர்கள்.

கோபாலபுரம் இல்லத்தில்

பெரியாருக்கு உணவு பரிமாறினேன்!

நெஞ்சுக்கு நீதியில் ஆறு பாகங்களை தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். தாய்வீட்டில் கலைஞர் என்ற இந்த நூல் ஏழாவது பாகம் போல இருக்கிறது.

★ குடியரசு அலுவலகத்தின் துணையாசிரியராக இருந்தது,

★ நாற்பது ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்தது,

★ அன்னை மணிம்மையார் கையால் ஓராண்டு காலம் சாப்பிட்டது,

★ தனது ரத்தத்தைத் தொட்டு திராவிட கழகக் கொடியை உருவாக்கியது,

★ புதுவையில் கலைஞர் தாக்கப்பட்டபோது காப்பாற்றிப் பெரியார் அவர்கள் மருந்திட்டது,

★ என் அண்ணன் முத்து அவர்கள் பிறந்தபோது குழந்தையைப் பெரியார் கையில் தலைவர் கலைஞர் கொடுத்தது,

★ என் அண்ணன் அழகிரி அவர்கள் திருமணத்தை பெரியார் அவர்கள் நடத்தி வைத்தது,

இப்படி எத்தனையோ காட்சிகள் இந்தப் புத்தகம் முழுவதும் இடம்பெற்றிருக்கிறது.

அதிலும் குறிப்பாக அண்ணன் அழகிரி அவர்களது திருமணம் பெரியார் திடலாக நடந்தது. அதற்குப்பிறகு, தந்தை பெரியார் அவர்களுக்கு கோபாலபுரம் இல்லத்தில் விருந்து. அப்போது பெரியார் அவர்களுக்கு உணவு பரிமாறியவன் நான் என்பதை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

**பெரியாரிடம் கலைஞர் வைத்த மரியாதை உணர்வுப் பூர்வமானது!**

இது தமிழர்தம் இல்லமெல்லாம் உள்ளமெல்லாம் இருக்க வேண்டிய நூல்! இதனை உருவாக்கித் தந்துள்ள ஆசிரியர் அவர்களை நன்றியால் வணங்குகிறேன். உலகில் எந்த இரண்டு இயக்கங்களுக்குள்ளும் இத்தகைய நட்பும் உறவும் இருந்திருக்க முடியாது. முரண்பட்டு மோதல் நடத்திய காலங்கள் உண்டு. யானை தனது குட்டியைப் பழக்கும்போது மிதிக்கும் அடிக்கும் என்பதைப் போல பெரியார் எங்களைத் திட்டித் திட்டிப் பழக்கினார் என்று கலைஞர் அவர்கள் சொல்வார்கள். தந்தை பெரியார் மீது தலைவர் கலைஞர் வைத்திருந்த மரியாதை என்பது உணர்வுப்பூர்வமானது. அதற்கு மிகச்சிறந்த உதாரணம் பெரியார் அவர்கள் மறைந்தபோது அவருக்கு அரசு மரியாதை தர வேண்டும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்த முடிவு!

"அரசு மரியாதை வழங்க வேண்டும்" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொல்கிறார்கள். "அவர் எந்த அரசுப் பதவியிலும் இல்லையே" என்று மூத்த அதிகாரி ஒருவர் சொல்கிறார். உடனே, "காந்திக்கு அரசு மரியாதை கொடுத்தார்களே. அவர் எந்த பதவியில் இருந்தார்?" என்று பட்டென்று கேட்டார் கலைஞர். அதன்பிறகும் அந்த அதிகாரி விடவில்லை. "மாநில அரசு இப்படி ஒரு முடிவெடுத்தால் மத்திய அரசின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும்" என்று அந்த அதிகாரி சொல்கிறார். "கோபப்பட்டால் என்ன செய்வார்கள்?" என்று முதலமைச்சர் கலைஞர் கேட்கிறார்கள். "ஆட்சியைக் கூடக் கலைக்கலாம்" என்கிறார் அந்த அதிகாரி.

"ஆட்சியைக் கலைக்க இதுதான் காரணமாக இருக்குமானால் இதை விடப் பெருமை எனக்கு எதுவும் கிடையாது" என்கிறார் முதலமைச்சர் கலைஞர். இது ஏதோ அறிவாலயத்தில் நடந்த உரையாடல் அல்ல. கோட்டையில் நடந்த உரையாடல். தமிழ்நாடு அரசின் கோட்டையில் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தாலும், தந்தை பெரியார் என்ற கொள்கைக் கோட்டையில் தலைமகனாக இருந்தார் தலைவர் கலைஞர் அவர்கள்.

**கழக ஆட்சி பெரியாருக்கு காணிக்கை என்றார் அண்ணா!**

ஆட்சியே தந்தை பெரியாருக்குக் காணிக்கை என்றார் பேரறிஞர் அண்ணா. தமிழ்நாடு அரசுதான் பெரியார் பெரியார்தான் தமிழ்நாடு அரசு என்றார் தலைவர் கலைஞர். நானும் இதனையே வழிமொழிந்து வருகிறேன். உங்களின் பலத்த கரகோஷங்களுக்கிடைய மீண்டும் அதனை வழிமொழிகிறேன்.

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கை கோட்பாடுகளை ஒலித்துக் கொண்டே இருப்போம்!

தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறிய மாநிலமாக மட்டுமல்ல, தன்னிறைவு பெற்ற மாநிலமாக உயர வேண்டும். இந்திய ஒன்றிய அரசின் ஆட்சிக் கருத்தியலாக, கூட்டாட்சிக் கருத்தியல் மலர வேண்டும். அனைத்து தேசிய இனங்களும் உரிமை பெற்றவைகளாகவும், அனைத்து மாநில மொழிகளும் ஒன்றிய ஆட்சி மொழியாக உயர்ந்து நிற்க வேண்டும். அனைவர் குரலுக்கும் ஒரே மரியாதையும் மதிப்பும் இருக்க வேண்டும். இதுதான் இந்திய ஒன்றியமும் அதில் உள்ளடங்கிய தமிழ்நாடும் இயங்க வேண்டிய முறை! அத்தகைய கூட்டாட்சிக் கருத்தியலை உள்ளடக்கிய இந்தியாவை அமைப்பதற்காகவே இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.

இது அரசியல் கூட்டணி அல்ல; கொள்கைக் கூட்டணி! தேர்தல் வெற்றியை மட்டும் கணக்கில் கொண்டு இதனை நாங்கள் உருவாக்கவில்லை. அந்த வெற்றிக்குப் பின்னால் அமையப் போகும் ஆட்சியில் கோலோச்ச வேண்டிய கொள்கைகளை மனதில் வைத்தே நாங்கள் செயல்படுகிறோம்.

**தமிழ்நாடு இழந்த உரிமைகளை மீட்டே தீருவோம்!**

தமிழ்நாடு இதுவரை இழந்த அனைத்து உரிமைகளும் மீட்கப்படும். மீட்கப்பட்டே தீர வேண்டும். கல்வி உரிமை நிதி உரிமை சமூகநீதி உரிமை மொழி உரிமை இன உரிமை மாநில சுயாட்சி உரிமை ஆகிய அனைத்தையும் மீட்போம். தமிழ்நாட்டின் நாடாளுமன்ற மக்களாட்சி உரிமைக்குக் கேடு விளைவிக்கப் பார்க்கிறார்கள்.

மக்கள் தொகை குறைந்துவிட்டது என்று சொல்லி நாடாளுமன்றத் தொகுதியின் எண்ணிக்கையைக் குறைக்கும் சதிச்செயலை அரங்கேற்றப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தியதற்குத் தண்டனையாக, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி எண்ணிக்கையை குறைக்கப் போகிறார்கள். 39 எம்.பி.க்கள் தமிழ்நாட்டில் இருந்து செல்கிறார்கள் என்றால் நம்முடைய உரிமையை எடுத்துச் சொல்ல உரிமையை நிலைநாட்டச் செல்கிறார்கள் என்று பொருள். இந்த எண்ணிக்கையானது கூட வேண்டுமே தவிர குறையக் கூடாது.

அதே போல் மகளிருக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீட்டையும் பா.ஜ.க. முழு ஈடுபாட்டுடன் கொண்டு வரவில்லை. மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிந்தபிறகு, தொகுதி வரையறை முடிந்த பிறகு என்று சொல்வதே இதை நிறைவேற்றாமல் இருக்கும் தந்திரம்தான். அதிலும் குறிப்பாக, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மகளிர் இடஒதுக்கீட்டை வழங்க மறுப்பது என்பது பா.ஜ.க.வின் உயர் வகுப்பு மனோபாவம்! காலப்போக்கில் பட்டியலின இடஒதுக்கீட்டையும் காலி செய்து விடும் ஆபத்தும் இதில் இருக்கிறது.

தமிழ் மொழி காக்க தமிழினம் காக்க தமிழ்நாட்டைக் காக்க இந்தியா முழுமைக்கும் சமதர்ம சமத்துவ சகோதரத்துவ சமூகநீதியைக் காக்க எனது வாழ்க்கையை முழுமையாக ஒப்படைத்துக் கொள்கிறேன் என்பதுதான் எனக்கு திராவிடர் கழகம் நடத்தி இருக்கும் இந்த பாராட்டு விழாவில் நான் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி!

**இன்னும் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது என உணர்த்தும் விழா!**

ஏதோ சாதித்துவிட்டான் – நினைத்ததை முடித்துவிட்டான் என்பதற்காக நடத்துகிற விழா அல்ல. இன்னும் நீ சாதிக்க வேண்டியது நிரம்ப இருக்கிறது. அதைச் சாதிப்பதற்கு நீ தயாராக இருக்க வேண்டும். நாங்கள் பக்கபலமாக இருக்கிறோம் என்பதை சொல்லிக்கொள்வதற்காகத்தான் இந்தப் பாராட்டு விழா நடந்து கொண்டிருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை மிகச் சரியாக முறையாகப் பயன்படுத்துவேன்.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கை கோட்பாடுகளை, சட்டமன்ற நாடாளுமன்ற – மக்கள் மன்றங்களில் நாங்கள் ஒலிப்போம். மக்கள் மன்றத்தில் திராவிடர் கழகத் தோழர்கள் திராவிடர் இயக்கத் தோழர்கள் பெரியாரின் தொண்டர்கள் தொய்வின்றித் தொடருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'வீரமணி வென்றிடுக!' என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள். அதையே நானும் வழிமொழிகிறேன். அய்யா ஆசிரியர் அவர்களே, ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் சொன்னால் அவருக்குக் கோபம் வந்துவிடும். அவருக்கு பிடிக்காது. இருந்தாலும் சொல்ல வேண்டிய கடமை எனக்கு உண்டு. ஓய்வெடுத்துப் பணியாற்றுங்கள். பெரியாரையும் கலைஞரையும் கடந்தும் நீங்கள் வாழ வேண்டும்.

**பெரியாரின் மாட்சி இன்னும் பரவ ஆசிரியர் நீண்டகாலம் வாழ வேண்டும்!**

'பெரியாரின் ஆட்சிக்கு நாங்கள் காரணகர்த்தாக்கள். பெரியாரின் மாட்சிக்கு வீரமணிதான் காரணம்' என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள். பெரியாரின் மாட்சி இன்னும் பரவ நீங்கள் நீண்ட காலம் வாழ வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் இல்லாத நேரத்தில் எனக்கு கொள்கை வழிகாட்டியாக இருப்பவர் அய்யா ஆசிரியர்!




சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் மகளிர் தொண்டரணி சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் திருநங்கைகளுக்கு சான்றிதழ்களை அமைச்சர்கள் கா்.பெரியகருப்பன் திருமதி பெ.கீதாஜீவன் ஆகியோர் வழங்கினர். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.மாவட்ட துணைச்செயலாளர் த.சேங்கைமாறன், மாநில மகளிரணி அமைப்பாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி அமைப்பாளர் நாமக்கல் ராணி ஆகியோர் உள்ளார்கள்.




குமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் நடைபெற்ற கவிதை ஒப்பித்தல் மற்றும் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் மற்றும் மேயர் ரெ.மகேஷ் ஆகியோர் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள்.


நாள் : 08.10.2023 (ஞாயிற்றுக்கிழமை)
திருநெல்வேலி மாநகராட்சி
திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,
பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும்
சிவகாசி மாநகராட்சி
வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்யவும் வருகைதரும்
மாண்புமிகு. நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்
கே.என்.நேரு
அவர்களே வருக! வருக!! வருக!!!
தங்கம் தென்னரசு
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
விருதுநகர் வடக்கு மாவட்ட செயலாளர்


கலைஞர் 100
1924 - 2023
நாள் : 08.10.2023, ஞாயிறு
நேரம் : காலை 9.00 மணி
இடம் : L.S.மஹால்,
பாளையங்கோட்டை.
தி.மு.க. சட்டத்துறை சார்பில்
முத்தமிழ் அறிஞர் டாக்டர்
கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு
திருநெல்வேலி மண்டல
வழக்கறிஞர்களுக்கான பேச்சுப்போட்டி
&
நெல்லை மாநகர வழக்கறிஞரணி சார்பாக
200க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள்
திரு. என்.ஆர்.இளங்கோ MP., அவர்கள்
மாநில சட்டத்துறை செயலாளர்
அவர்கள் முன்னிலையில் கழகத்தில்
இணையும் விழாவிற்கு
வருகை தரும் அனைவரையும் வரவேற்று மகிழ்கிறோம்...
என்றென்றும் தலைவர்
தளபதி
வழியில்...
சு.சுப்பிரமணியன் B.E., M.B.A., L.L.B.,
நெல்லை மாநகர திமுக செயலாளர்
நெல்லை மாநகர தி.மு.க.




தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க
தூத்துக்குடி மாநகராட்சியில் புதியதாக
ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையம் மற்றும்
ஸ்டெம் பார்க் முடிவுற்ற பணிகளை
திறந்து வைக்க வருகை தரும்



மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்
திரு. **கே.என். நேரு**



தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர்
திமுக கழக துணை பொதுச் செயலாளர்
திருமிகு. **கனிமொழி கருணாநிதி**

திருமிகு. **பெ.கீதா ஜீவன்**
மாண்புமிகு சமூக நலன் மற்றும்
மகளிர் உரிமை துறை அமைச்சர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்

திரு. **அனிதா ஆர். ராதா கிருஷ்ணன்**
மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலன் மற்றும்
கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர்

**ஜெகன் பெரியசாமி**
தலைமை செயற்குழு உறுப்பினர், மாநகர மேயர், தூத்துக்குடி மாநகராட்சி

சிவகங்கை மாவட்ட பொறியாளர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா! பொறியாளர் மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள்!

# தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக். 8-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு பொறியாளர் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டிகள் காளையார்கோவில் புனித மைக்கேல் பொறியியல் கல்லூரி அரங்கில் மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ரவி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஏ. ஆர்.முருகப்பன் வரவேற்றுப் பேசினார். முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் பேச்சுப் போட்டியினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதிலுமிருந்து 256க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகள், பங்கேற்றார்கள். பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு ரொக்கப்பரிசுகளையும், கேடயம், சான்றிதழ்களையும் வழங்கி கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட கழகம் தலைவர் கலைஞரால் தொடர்ந்து பாதுகாக்கப் பட்டு வந்தது. கலைஞர் மறைவுக்கு பிறகு முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் கழகம் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கலைஞர் பிறந்த நாள் விழாவை வறுமை ஒழிப்புத் தினமாக பிற்பட்டோருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக நடைபெற்று வந்தது. ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் விழாவாக கொண்டாடப்பட்டது.

தற்போது கலைஞரின் நூற்றாண்டு விழாவாக இருப்பதால் கழகமும் முதல்வர் தளபதி தலைமையிலான தமிழ்நாடு அரசும் தற்போது அடுத்த ஆண்டு ஜூன் 2024வரை கொண்டாடப் படும் என்று முதல்வரால் அறிவிக்கப்பட்டு சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகிறது. கழகத்தில் உள்ள ஒவ்வொரு அணிகளும் சிறப்பாக தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை கொண்டாடி வருகிறார்கள். அதிகமான அளவில் பொறியியல் கல்லூரி மாணவ-மாணவிகள் இந்த பேச்சுப் போட்டியில் பங்கேற்றதற்காக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

### சமூக விஞ்ஞானியாக திகழ்ந்தவர் கலைஞர்

இந்த பொறியியல் அணி சார்பில் இன்று நடைபெற்ற பேச்சு போட்டியின் முலம்கலந்து கொண்டவர்கள் தலைவர் கலைஞரின் பன்முகத்தன்மையினை தெரிந்து கொள்ள முடியும்.இந்தியாவிலேயே தமிழகத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகளை உருவாக்கினார். இதனால் ஏராளமான பொறியியல் மாணவர்கள் உருவானார்கள்..ஐந்து முறை முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் இந்தியாவிலுள்ள முதல்வர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். அவர் ஒரு சமூக விஞ்ஞானியாகத் திகழ்ந்தார்.

எந்த ஒருதிட்டத்தையும் தமிழகம் தான் இந்தியாவிற்கே அறிமுகம் செய்து வைத்தது. தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் நடைபெற்றது. இலவச மின்சார திட்டம் தமிழகத்தில் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் இன்



னும் பல வட மாநிலங்களில் கிராமங்களுக்கு மின்சார வசதியே இல்லை. இதே போல் கிராமங்களில் கட்டமைப்பு வசதி , சாலை அமைப்பு வசதி, தெரு விளக்குவசதி போன்ற அனைத்து வசதிகளையும் கலைஞர் அவர்கள் திட்டமிட்டு சிந்தித்து செயல்படுத்தினார். கிராமங்களில் நகரங்களுக்கு இணையாக பாதுகாக்கப்பட்ட மேல்நிலை தேக்க குடிநீர் திட்டத்தைசெயல்படுத்தினார். போக்குவரத்து வசதிகளை கிராமப்புறங்களில் ஏற்படுத்தினார். தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கி அரசுப் போக்குவரத்து கழகங்களை உருவாக்கினார்.

பரிதிமாற் கலைஞர் முதல் அனைத்து தமிழறிஞர்களும் கனவில் இருந்த 150 ஆண்டுகள் மிகவும் பழமையான தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்தினை கலைஞர் போராடி பெற்றுத் தந்தார். கலைஞர் மொழி, இனம், சமூகத்திற்காக பாடுபட்ட ஒரு சமூக விஞ்ஞானியாக விளங்கினார் . கலைஞர் நம்மை விட்டு பிரிந்து சென்றாலும் நம்முடைய மக்களின் இதயத்தில் வாழ்ந்து வருகிறார். மக்களின் மனதில் நிலைத்து நிற்கிறார். அவரைப் பற்றி இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இந்த பேச்சுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது.

இதன்வாயிலாக அவருடைய செயல்பாடுகளை அனைவரும் தெரிந்து கொள்ள முடியும் . இந்தியாவிலேயே உயர் கல்வியில் 24 சதவீதம் தான் மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். ஆனால் தமிழகத்தில் 54 சதவீதம் தேர்ச்சி என்று புள்ளிவிவர கணக்குகள் கூறுகிறது. எனவே கல்வியின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் தலைவர் கலைஞர்.

### கலைஞரது புகழ் என்றும் நிலைத்திருக்கும்!

அவரது வழியில் முதல்வர் தளபதி அவர்களும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். இதை மாணவ மாணவிகள் தெரிந்து கொள்ள வேண்டும். தலைவர் கலைஞர் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அதிக அளவில் மக்கள் பயன் பெறுவார்கள். அவர் மக்களுக்காக திட்டங்கள் நிறைவேற்றியதை நாம் அவருடைய நூற்றாண்டு நாளில் அவருக்கு அளித்திடும் மரியாதைஆகும். அவரது புகழ் என்றும் நிலைத்திருக்க நாம் அனைவரும் உறுதி ஏற்போம்!

இதன்முலம் தலைவர் கலைஞரின் புகழ் பல நூற்றாண்டுகள் தொடரும்.

இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பொறியியல் கல்லூரி மாணவர்கள் முதல் மூன்று இடம் பிடித்த ஜெகதீஸ்வரன், சிபிசக்கரவர்த்தி, பிரதீஷ், ரூபாய் பத்தாயிரம் வீதம் முப்பபதாயிரம், இரண்டாம் இடம் பிடித்த அருண்குமார், பிரவீன் குமார், ராஜ்குமார், ஆகியோருக்கு ரூபாய் 5000 வீதம் ரூபாய் 15,000,ம் மூன்றாவது இடம் பிடித்த ஆண்டி போஸ்கோ, கார்த்திகேயன், சாத்தையா, ஆகியோருக்கு ரூபாய் 3000 வீதம் ரூபாய் 9ஆயிரமும், ஆறுதல் பரிசாக பாரதி, நமீதா, குணவதிக்கு ஆகியோருக்கு சான்றிதழும் நினைவு பரிசும் அமைச்சர் பெரிய கருப்பன் வழங்கி பாராட்டினார். இதில் முதலிடம் வென்ற மாணவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 241 மாணவ மாணவிகளுக்கு பங்கேற்றதை பாராட்டி தலா ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக மாவட்டக் கழகத்தின் சார்பில் ரூபாய் 2லட்சத்து 41ஆயிரம் மற்றும் சான்றிதழ்களை அமைச்சர் பெரிய கருப்பன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் சீ.பிரதீப், புனித மைக்கேல் பொறியியல் கல்லூரி தலைவர் ஸ்டாலின் ஆரோக்கியராஜ், ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். பேச்சுப் போட்டி நடுவர்களாக புலவர் காளிராஜா, புலவர் திருமதி கிருஷ்ணவேணி, திருமதி ஜோதிசுந்தரேசன், ராஜாராம் ஆகியோர் செயல்பட்டார்கள். மாவட்ட பொறியாளர் அணித்தலைவர் ரவி நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் துணைத் தலைவர்கள் சுலைமான் பாதுஷா, துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், பாண்டிச் செல்வம், எஸ். குழந்தை வேல், எஸ். எஸ். சரவணன், எஸ். ராமநாதன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் வே. ஆரோக்கியசாமி, யோககிருஸ்னகுமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் மாவட்ட வர்த்தக அணி தலைவர் ருக்மாசரவணன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# திராவிட மரம் போல் நிமிர்ந்து நில்!



மரமே உன்னை வணங்குகிறேன்!
திராவிட மரம் போல் நிமிர்ந்து நில்!
எழுத்தை நேசிக்கும்
எவரொருவரையும் போல்,
அடர்ந்து படர்ந்த மரங்களைப் பார்த்து
மயங்கியிருக்கிறேன் பலமுறை!
சுழன்றடிக்கும் காற்றில் விழுந்து விடாமல்,
வீழ்வேனா நானென்னும் பேரிரைச்சலோடு,
தலைவிரி கோலமாய்த் தலையாட்டும் மரம் பார்த்து
பயந்திருக்கிறேன் சிலமுறை!
வருண பேதமெல்லாம் கிடையாது மரத்துக்கு!
ஐந்தறிவு உயிரையும், ஆறறிவு உயிரையும்
சரிசமமாய் பாவிக்கும்.
மரங்களின் தாலாட்டில்கண் துயிலும் பறவையினம்.....
மரங்களின் நிழலில் ஓய்வெடுக்கும் மனித இனம் !
மரம் இயற்கையின் வரம்.... பல்வேறு தருணங்களில்
இதை உணர்ந்திருக்கிறேன்என்றாலும்,
பல்லுயிர் காக்கும் அரும்பெரும் மரத்தை
ஊட்டி தான் நமக்கு காட்டி இருக்கிறது.
எங்கோ ஆழத்தில் மணலற்ற மலை இடுக்கில்
போராடிப் போராடித்தான் முளைத்திருக்கும் அது !
எத்தனையோ இன்னல்களை முறியடித்துப் பிழைத்திருக்கும் !
அந்த மரம் தான் பாதாள பலி கேட்டுக்கீழ்நோக்கிச்
சரிந்த பேருந்தைக் கிளைக்கரங்களால் தாங்கிப்பிடித்து
நம்மைத் திகைக்க வைத்திருக்கிறது!
கோபாலபுரத்தின் இளைஞரைத் திரட்டி,
திராவிட உணர்வு வீழ்ச்சியடையாமல்
தமிழ் மண்ணெங்கும் காத்த இளைஞனைப் போல்,
தன் வலி மறந்துதாங்கிப் பிடித்திருக்கிறதுஊட்டி விருட்சம்.
சனாதனம் மதமென்றால்திராவிடம் மரம்.
தாழ்ந்து கிடப்போரைத் தாங்கிப் பிடிப்பதால் தான்
ஓங்கி வளர்கிறது ஒவ்வொரு முறையும்!
'மரம் மாதிரி நிற்காதே' என்பது பொய் மொழி.
"திராவிட மரம் போல் நிமிர்ந்து நில்" _ என்பதுதான்
ஊட்டி தீட்டும் உணர்வுள்ள பொன்மொழி!



புலவர்
**இந்திரகுமாரி**

# செம்பரம்பாக்கம் ஏரியில் 100 கனஅடி உபரி நீர் திறப்பு!

சென்னை, அக்.8-

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து இன்று 100 கனஅடி நீர் உபரி நீர் திறக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான 24 அடி கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் தற்போது 21.96 அடியாக உள்ளது. 3 ஆயிரத்து 645 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட ஏரியில் தற்போது 3 ஆயிரத்து 110 மில்லியன் கன அடி நீர் உள்ளது. ஏரிக்கு வரும் நீர்வரத்து 231 கனஅடியாக உள்ள நிலையில், நீர் பிடிப்பு பகுதிகளில் அவ்வபோது மழை பெய்து வருகிறது. இதனால் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து இன்று காலை 10 மணியளவில் 100 கனஅடி உபரி நீர் திறக்க பொதுப்பணித் துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். உபரிநீர் திறக்கப்பட உள்ளதால், சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர். திருமுடி வாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை மற்றும் அடையாறு ஆற்றின் கரையின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

தமிழ் வரலாற்று ஆய்வாளர் ஒரிசா பாலு மறைவு!

# தன்னலம் கருதாத, தமிழ் நலம் காக்கும் ஒரிசா பாலுவின் உழைப்பும் ஆர்வமும் என்றும் மதிக்கப்படும்!

## மறைவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக். 8-**

**தமிழ் வரலாற்று ஆய்வாளர் ஒரிசா பாலு அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தன்னலம் கருதாத, தமிழ் நலம் காக்கும் ஒரிசா பாலுவின் உழைப்பும் ஆர்வமும் என்றும் மதிக்கப்படும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-



தமிழ் வரலாற்று ஆய்வாளரான ஒரிசா பாலு (எ) சிவபால சுப்பிரமணி அவர்கள் மறைந்த செய்தியால் வேதனையடைந்தேன்.

ஒரிசா பாலு அவர்கள் தமிழர்களின் வரலாற்றுத் தொடர்புகளைக் கடல்வழியே தேடிக் கண்டு வெளிப்படுத்துவதில் மிகுந்த முனைப்புடன் செயலாற்றி வந்தவர் ஆவார். தன்னலம் கருதாத தமிழ் நலம் காக்கும் அவரது உழைப்பும் ஆர்வமும் என்றும் மதிக்கப்படும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர், நண்பர்கள், தமிழன்பர்கள் ஆகிய அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் தொடர் நடவடிக்கையால் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் சாத்தியமாகும்!

# அடுத்த 7 ஆண்டுகளில் இலக்கை அடைய முடியுமென பொருளாதார நிபுணர்கள் கணிப்பு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் தகவல்!


சென்னை, அக்.8-

தமிழ்நாடு அரசின் தொடர் நடவடிக்கை காரணமாக, 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது சாத்தியமான ஒன்று தான். இதே வேகத்தில் பயணிக்கும் போது அடுத்த 7 ஆண்டுகளில் நம்மால் இலக்கை அடைய முடியுமென பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர் என "தினகரன்" நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவும், மாநில பொருளாதாரத்தை வலுவடைய செய்யவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஜிடிபி 2030ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்பது முதலமைச்சரின் லட்சிய கனவாக உள்ளது. அந்த இலக்கை நனவாக்க, தமிழ்நாடு அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் வெளி மாநில மற்றும் வெளிநாட்டு தொழில்முனைவோரின் முதலீடுகளை ஈர்க்க, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில், ஐக்கிய அமீரகத்திற்குச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு முதலீடு திட்டங்களை மேற்கொண்டார். தைவான் காலணி தயாரிப்பு நிறுவனமான ஹாங் பூவின் தலைவரான டி.ஒய். சாங் மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

தற்போது, சென்னை போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழும துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில் நுட்ப மையம் மற்றும் புத்தாக்க மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார். 3 லட்சம் சதுரடியில் அமைய உள்ள இந்த புத்தாக்க மையத்தின் மூலம் 2,500 பேருக்கு உயர் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது, மாநிலத்தின் பொருளாதாரம் சுமார் 290 பில்லியன் டாலர் ஆகும். 2022-23 பட்ஜெட் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளபடி, 2021-22க்கான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) மதிப்பு ரூ.21,79,655 கோடி ஆக உள்ளது. 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைய ஒரு ஆண்டிற்கு 1313.5% வளர்ச்சி தேவைப்படும். முதல் ஆண்டில் நமது மாநிலத்தில் வளர்ச்சி 14.5% ஆக உள்ளது. நமக்கு சிறப்பான தொடக்கம் கிடைத்துள்ள தால், அடுத்தடுத்த ஆண்டுகளில் மாநிலத்தின் வளர்ச்சி 14% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.



தினகரன்
அக்டோபர் 7, 2023 சனிக்கிழமை
அரசின் இலக்கு
தமிழ்நாட்டில் முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவும், மாநில பொருளாதாரத்தை வலுவடைய செய்யவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஜிடிபி 2030-ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்பது முதலமைச்சரின் லட்சிய கனவாக உள்ளது. அந்த இலக்கை நனவாக்க, தமிழ்நாடு அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.
அந்த வகையில் வெளிமாநில மற்றும் வெளிநாட்டு தொழில்முனைவோரின் முதலீடுகளை ஈர்க்க, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில், ஐக்கிய அமீரகத்திற்கு சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், பல்வேறு முதலீடு திட்டங்களை மேற்கொண்டார்.

பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக உள்ள குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில்களின் மேம்பாட்டுக்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இத்துறையின் வளர்ச்சி வரும் ஆண்டுகளில் வளர்ச்சி 12% ஆக இருந்தால்கூட மாநில பொருளாதாரம் 750 பில்லியன் டாலராக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி, மின் வாகனங்கள், தோல் அல்லாத காலணிகள், பின்டெக், ஜவுளி, பாதுகாப்பு உற்பத்தி ஆகியவற்றுக்கும் தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஐடி மற்றும் ஐடி தொடர்பான தொழில்களை இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நகரங்களுக்கு எடுத்துச்செல்வதிலும் தமிழ்நாடு அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

பின்னலாடை நகரமான திருப்பூரில் ஜவுளி மையம் உருவாக்கவும், உணவு பதப்படுத்துதல் தொழிலுக்கும் அரசு அதிக முக்கியத்துவம் கொடுக்கவும் தமிழ்நாடு அரசு முனைப்பு காட்டி வருகிறது. அனைவருக்கும் வளர்ச்சி என்பதில், தமிழ்நாடு அரசு முக்கியத்துவம் கொடுத்து, பொருளாதார வளர்ச்சியை கைவிட்டு விடக்கூடாது என்பதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசின் இந்த தொடர் நடவடிக்கை காரணமாக, 1 டிரில்லியன் டாலர்பொருளாதாரம்என்பது சாத்தியமான ஒன்றுதான், இதே வேகத்தில் பயணிக்கும்போது அடுத்த 7 ஆண்டுகளில் நம்மால் இந்த இலக்கை அடைய முடியும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

இவ்வாறு அத்தலையங்கத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி திட்டக்குடி நகரத்தில் "இல்லம் தேடி இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை முகாமை" மாவட்டக் கழகச் செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்தார்.உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், திட்டக்குடி நகரக் கழகச் செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் வி.பி.பி.பரமகுரு, மங்களூர் கிழக்கு, தெற்கு, வடக்கு ஒன்றியக் கழக செயலாளர்கள் பட்டூர்.வீ அமிர்தலிங்கம், பா. செங்குட்டுவன், அடரி. த. சின்னசாமி, திட்டக்குடி நகர மன்றத் தலைவர் திருமதி வெண்ணிலா கோதண்டம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாரதிராஜா, கே.என்.டி. சங்கர் மற்றும் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# விஷமிகளின் விஷமத்தனம்!

## 'முரசொலி' முகநூல் பற்றி விளக்கம்!

**'முரசொலி' முகநூல் பக்கத்தில் கடந்த இரண்டு நாட்களாக தேவையற்ற சில புகைப்படங்களை சில விஷமிகள் பதிவேற்றம் செய்து வருகின்றனர்.**

**இவ்வாறு, 'முரசொலி' முகநூல் பக்கத்தை 'ஹேக்' செய்து விஷமிகள் மேற்கொண்ட செயல் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள, உடனடியாக சென்னை மாநகர காவல் துறை 'சைபர் கிரைம்' பிரிவில் புகார் தரப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**- பொது மேலாளர்**
**முரசொலி**

## அரசு ஊழியர் - ஆசிரியர்களுக்கு அன்னையாக இருந்து

# அரண் காக்கும் திராவிட மாடல் அரசு!

காலிங் பெல் வழக்கத்தை விட சற்று கூடுதல் சத்தத்துடன் அதிர்ந்தது…

கதவைத் திறந்தால், நம் சங்கித் தம்பி தான்… சிரித்துக் கொண்டு நின்றிருந்தார்..!

என்ன தம்பி ரொம்ப நாளா இந்தப் பக்கம் ஆளையே காணோம்…

ஆமாண்ணே, அப்பப்ப வரணும்ன்னு நினைக்கிறது தான். ஆனா இப்ப நடக்குறத எல்லாம் பார்த்து மனசு பொறுக்க முடியாமத் தான் உங்களைப் பார்த்து குமுறலை கொட்டிட்டு போலாம்ன்னு வந்திருக்கேன் என்றதும்…

என்ன தம்பி குமுறலைக் கொட்ட வந்த நீங்க… இவ்ளோ முக மலர்ச்சியோடு பற்கள் தெரிய சிரிச்சிட்டே வந்து கதவை தட்டுறீங்களே… என்ன விசேஷம் என்றேன்..!

டக்குன்னு முகத்தை சீரியஸ் மோடுக்கு மாத்திக்கிட்டு வந்து உட்கார்ந்தவருக்கு வீட்டம்மாவிடம் ஒரு காஃபி சொல்லி விட்டு… அவரைப்பார்த்து, குமுறுங்கதம்பிஎன்றேன்..!

நேரடியாவே நான் விஷயத்துக்கு வர்றேண்ணே… இந்த ஆசிரியர்கள் எல்லாம் என்ன பாவம்ண்ணே செஞ்சாங்க..?! அவங்களுக்கு நியாயம் கிடைக்கும்ன்னு நீங்க… அதாவது தி.மு.க. தேர்தல் அறிக்கைல சொன்னதை நம்பித் தானே உங்களுக்கு வாக்களித்தார்கள்..?! அவங்களை இப்படி கதறக் கதற கைது செஞ்சி போராட்டத்தை வாபஸ் வாங்க வச்சிருக்கீங்களே, இது நியாயமாண்னே…?!

தம்பி… ஆசிரியர்களுக்காக கடுமையாக வருத்தப்பட்டு மன உளைச்சலில் இருக்கீங்க… மொதல்ல இந்த காஃபியை குடிங்க… ரிலாக்ஸ் ஆகுங்க..!

அண்ணே… உங்க ஆட்சியை பத்தி குறை சொன்னா, பதில் சொல்ல முடியாம மடை மாத்துறீங்க பார்த்தீங்களா..?!

என்ன தம்பி… நீங்களே, அந்த போராடுகின்ற ஆசிரியர்களுக்கு தீங்கிழைத்தது தி.மு.க. இல்லன்னு சொல்றீங்க… அப்படியிருக்கும் போது நான் ஏன் தம்பி பேச்சை மடை மாற்றணும்..?!

நான் எப்பண்ணே அப்டி சொன்னேன்..?!

அவங்களுக்கு நியாயம் கிடைக்கும்ன்னு சொன்னது யாரு..?!

நீங்க… அதாவது தி.மு.க. தாண்ணே…

எப்ப சொன்னோம்..?!

போன அ.தி.மு.க. ஆட்சில அவங்க போராடும் போது சொன்னீங்க… தேர்தல் அறிக்கைலயும் சொல்லியிருக்கீங்க…

அப்ப அவங்களுக்கு அநியாயம் பண்ணினது யாரு…?!

அதான்… போன ஆட்சிலன்னே…

போன ஆட்சிலன்னா…?! யாரு அநீதி இழைத்தார்கள்… எவ்வளவு காலமா அந்த ஆசிரியர்களுக்கு அநீதி நடந்திட்டிருக்குன்னு தெளிவா சொல்லுங்க தம்பி.

2011 லேர்ந்து 2021 வரைக்கும் பத்து ஆண்டுகள் நடந்த அ.தி.மு.க. ஆட்சில ஜெயலலிதாவும், எடப்பாடியும் சேர்ந்து அந்த ஆசிரியர்களுக்கு… அவர்கள் கேட்பதை கொடுக்காமல் அநீதி செஞ்சிருக்காங்கண்ணே…!

இப்ப புரியுதா..?! தி.மு.க. அவங்களுக்கு அநீதி இழைக்கல. அ.தி.மு.க. அவங்களுக்கு செஞ்ச மாபெரும் துரோகத்தை இப்போ சரி செய்யும் நிலையில் தி.மு.க. இருக்கு..!

ஆமாண்னே… நீங்க சரி செய்யறோம்ன்னு சொல்லிட்டு ஆட்சிக்கு வந்தீங்கள்ல… அதான் அவர்கள் இப்போ அதைக் கேட்டு போராடுறாங்க… அவங்களை கைது பண்ணினா சரியாண்ணே…?!

உண்மை தான் தம்பி… ஆனால் தி.மு.க. தனது தேர்தல் அறிக்கைல கொடுத்திருந்த 550 வாக்குறுதிகளில், கிட்டத்தட்ட இந்த இரண்டரை ஆண்டு கால ஆட்சியிலேயே 400 வாக்குறுதிகளுக்கும் மேலாக நிறைவேற்றி விட்டது தம்பி..!

மேலும் கடந்த ரெண்டு வருஷமா, நீங்க எல்லாரும் எங்களிடம் கேட்டு கிண்டல் செய்து கொண்டிருந்த இந்தியாவின் ஆகப் பெரிய நலத்திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தையும் கூட போன மாசம் நிறைவேற்றி விட்டோம் தம்பி..!

அதே மாதிரி கொஞ்சம் பொறுமையா இருந்தா… இவங்களுக்கும், படிப்படியாக நிதி நிலைமையை சரி செய்து விட்டு கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவார் தம்பி நம் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்கள்..!

அதெல்லாம் சரிண்ணே… நீங்க ஆட்சிக்கு வந்தா இவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவோம்ன்னு சொல்லிட்டு, இப்ப நிதி இல்லை அது இல்லைன்னு காரணம் சொல்றீங்களே.. இது சரியா..?!

இவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற மாட்டோம்ன்னு தி.மு.க. சொல்லவே இல்லை தம்பி. இப்ப உடனே இவர்களுக்கு செய்ய முடியாததற்கு காரணமே கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் எடப்பாடி வாங்கி வச்ச கடனும், மற்றும் அவருடைய ஆட்சிக்காலத்தில் ஒதுக்க வேண்டிய நிதியை… செய்ய வேண்டிய செலவை மிகக் கேவலமான முறையில் ஒத்திப் போட்டதையும் இப்பொழுது தி.மு.க. அரசு தன் தலைமேல் சுமந்து நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் தான் இந்த தாமதம்..!

என்னண்ணே சொல்றீங்க…?! நீங்க சொல்றதெல்லாம்நம்பறமாதிரியா இருக்கு..?!

ஆமாம் தம்பி நம்ப முடியாதது தான்… நேர்மையாளர்கள், துணிச்சல் மிக்கவர்கள், நல்ல நிர்வாகிகள் செய்ய துணியாத கையாலாகாத தனத்தைத்தான் எடப்பாடி செய்திருக்கின்றார்.

தனது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற வரலாறு காணாத ஊழல்களால், ஐந்து லட்சம் கோடி ரூபாய்களுக்கும் அதிகமாக கடனை வாங்கி வைத்து விட்டு, கஜானாவும் காலியாக இருந்த நிலையில்…

அடுத்து வரும் தேர்தலில் தாம் வெல்ல மாட்டோம் என்று தெரிந்து விட்டதால், திடீரென்று அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை 58லிருந்து 59ஆக மாற்றி விட்டார்… அடுத்த ஆண்டு கொரோனா கொடுங்காலம் என்பதால் அது 60 ஆக மாற்றப்பட்டு விட்டது..!

அதன் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக ஓய்வு பெறுவோர் எல்லாம் இந்த ஆண்டு தான் ஓய்வு பெறும் நிலை. அதனால் இந்த ஆண்டு மட்டுமே 25 ஆயிரம் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறுகின்றனர்..!

அவர்களுக்கான ஓய்வூதிய பலன்கள் மட்டுமே சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாய்களை இந்த ஆண்டில் தி.மு.க. அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது..! அதேப் போன்று போக்குவரத்து தொழிலாளர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட ஓய்வூதிய பலன்கள், தாலிக்கு தங்கம் போன்ற திட்டங்களுக்கு எடப்பாடி ஆட்சியில் கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்ட நிதிகள் அனைத்துமே, பத்தாயிரம் கோடி ரூபாய்களுக்கும் மேலாக இந்த இரண்டு ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளது.

இதேப் போன்று இன்னும் பல தகிடுதத்தங்களைச் செய்து அ.தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கப்பட வேண்டிய நிதிகளை அடுத்து வந்த திமுக ஆட்சியின் தலையில் கட்டி விட்டுத்தான்…

இன்றைக்கு போராடும் ஆசிரியர்களுக்காக எடப்பாடி நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றார்..!

மேலும் 2011இல் தி.மு.க. ஆட்சியை விட்டு போகும் போது தமிழ்நாட்டின் கடன் தொகை ஒரு லட்சத்து பத்தாயிரம் கோடி மட்டுமே. ஆனால் 2021இல் மீண்டும் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற போது தமிழ்நாட்டின் கடன் சுமையை ஆறு லட்சம் கோடியாக பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உயர்த்தி வைத்துள்ளார்கள்.

இத்தனைக்கும், அந்த பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் சொல்லிக்கொள்ளும் படியாக எந்தவொரு நலத்திட்டமோ, உட்கட்டமைப்போ கூட அ.தி.மு.க. அரசு செயல்படுத்திடவும் இல்லை. அத்தனையும் அரசு கஜானாவிலிருந்து பல்வேறு வழிகளில் அதிமுக அமைச்சர்களின் வீட்டு லாக்கர்களின் பத்திரங்களாக பத்திரப்படுத்தப்பட்டு விட்டிருக்கின்றன.

இந்த நிலையில் 2021இல் தி.மு.க. மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, வரலாறு காணாத பேரழிவான கொரோனாவின் கோரப்பிடியில் தமிழ்நாடும், இந்தியாவும் இருந்த நிலையில்… முதல் எட்டு மாதங்களுக்கும் வருமானமே இல்லாமல், வெறும் செலவினங்களை மட்டுமே அரசு செய்ய வேண்டிய நிலை இருந்தது..!

கடந்த 22 மாதங்களில் தான் தனது நேர்மையான, வெளிப்படையான நிர்வாக திறமையினால், நிதி நிலையை படிப்படியாக சரி செய்து… பல்வேறு நலத்திட்டங்களை, உட்கட்டமைப்பு வசதிகளையும், தொலை நோக்கு திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது நம் தளபதியாரின் திராவிட மாடல் அரசு..!

அதெல்லாம் சரிண்ணே… ஒரு அரசு ஆசிரியருக்கு வெறும் 2500 மட்டும் உயர்த்தி வழங்கியிருப்பது நியாயமாண்ணே…?!

நல்லது தம்பி… அவர்கள் பகுதி நேர ஆசிரியர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் தான் அவர்கள் பள்ளிக்கு வர வேண்டும். அதிலும் அரை நாள் தான் அதாவது மூன்று பீரியட் அவர்கள் கிளாஸ் எடுத்தால் போதும். அதாவது வாரத்திற்கே அதிக பட்சமாக ஒன்பது மணி நேர வேலை தான்.

அதாவது மாதத்திற்கு அதிக பட்சமாக ஆறு நாட்களுக்கான வேலை மட்டுமே பார்ட் டைமாக செய்பவர்களுக்கு… 12,500 ரூபாய் சம்பளம் என்பது பல லட்சம் தனியார் பள்ளி ஆசிரியர்களின் முழு மாத சம்பளத்தை விட அதிகம் தம்பி.

அவர்களது கோரிக்கை, தங்கள் பணியை நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதே..! அது மற்ற நிதிச் சுமைகள் எல்லாம் படிப்படியாக குறையும் பொழுது இவர்களும் நிரந்தரமாக்கப்படுவார்கள். அவர்களுக்கு நியாயமான ஊதிய உயர்வும் கூட இப்பொழுதைக்கு கொடுக்கப்பட்டு விட்டது.

அடுத்ததாக போராடுபவர்கள், ஆசிரியப் பணிக்கான டெட் தேர்வு தேர்ச்சி பெற்றவர்கள். சீனியாரிட்டி முறையில் தான் பணி வழங்க வேண்டும், நுழைவுத் தேர்வு எல்லாம் கூடாது என்பது தான் தி.மு.க.வின் நிலைப்பாடு. ஆனால் அதை ஒன்றிய அரசின் ஆணையை சுட்டிக் காட்டி ஜெயலலிதா பிடிவாதமாக நிறைவேற்றி விட்டார்.

அந்த தேர்வில் வென்றவர்கள் அனைவருக்கும் பணி வழங்காமல் விட்டது ஜெயலலிதாவின் தவறு. அடுத்தடுத்த ஆண்டுகளில் பணி நியமனம் செய்ய வேண்டுமென்றால், மீண்டும் புதிதாக வரும் ஜூனியர்களுடன் சேர்ந்து தேர்வெழுதி வென்றாக வேண்டிய நிலையில்… இவர்கள் அது முடியாது என்கிறார்கள்.

தேர்வு என்று வந்து விட்டாலே, சீனியாரிடி இருக்காது என்பது தான் கலைஞர் கருத்து. அதை மீறித்தான் ஜெயலலிதா தேர்வு வைத்தார். அதில் வென்றவர்கள் அதற்கு முன்பே சீனியாரிடியில் இருந்தவர்களை புறம் தள்ளித்தான் ரேங்க் அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டார்கள். மீதமிருப்பவர்கள் அடுத்த பேட்ச்சுக்கு மீண்டும் ஜூனியரோடு சேர்ந்து தேர்வெழுத வேண்டும் என்பதை எப்படி மறுக்க முடியும்..?!

இதையும் கூட குழு அமைத்து ஆராய்ந்து சரி செய்வதாகத்தான் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்…

ஒக்கே இதுவும் போகட்டும்… அந்த இடைநிலை ஆசிரியர்கள், ஒரே மாதிரி ஒரே பள்ளியில் வேலை பார்ப்பவர்களுக்கு வேறு வேறு சம்பளம் என்றால் என்ன நியாயம்ன்னே…?!

இதுவும், மேலே சொன்னது போல் ஜெயலலிதா ஆட்சியில் நடந்தது தான் தம்பி… சீனியாரிட்டி படி பணி அமர்த்தப்பட்டவர்களும், அதே ஆண்டில் அடுத்ததாக டெட் தேர்வின் அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டவர்களுக்கும் இடையே நடந்த பே கமிஷன் விதிப்படியான ஊதிய வித்தியாசம் தான் தம்பி..!

இரு தரப்பினருக்கும் இடையேயான சம்பள வித்தியாசம் சராசரியாக ஐந்தாயிரம் ரூபாய். ஆனால் இதே நிலையில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியைகளின் மொத்த மாத சம்பளமே ஐயாயிரம் தான் தம்பி. இவர்களும் சற்று பொறுமை காத்தால் இந்த சட்ட சிக்கல் சரி செய்யப்பட்டு நிவாரணம் கிடைக்கும். அதற்குத் தான் மூன்று பேர் கொண்ட குழுவை அமைத்து இதை தீர்வு காண பள்ளிக் கல்வித்துறை முன்னெடுத்துள்ளது..!

இப்ப சொல்லு தம்பி, இது தமிழ்நாட்டின் உயிர் போகின்ற மிக மிக அத்தியாவசியமான பிரச்சினை அல்ல. அவர்களுக்கு அரசு உறுதியளித்துள்ளது. நிதி நிலை சரி செய்யப்பட்டவுடன், இவர்கள் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்.

அதற்குள்ளாக… போராட்டம், ஆர்ப்பாட்டம், அரசுக்கு எதிரான கூக்குரல்கள், இவர்களுக்கு அநீதி இழைத்தவர்களுடனேயே கை கோர்த்து தேர்தலில் நிற்பேன் என்பது எல்லாம் என்ன மாதிரியான செயல் தம்பி..?!



**சௌமியன் வைத்தியநாதன்**
திராவிட இயக்க எழுத்தாளர்

ஒரே கையெழுத்தில் ஒண்ணரை லட்சம் அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிய ஜெயலலிதாவின் டெஸ்மா சட்டம் பற்றி தெரியாதவர்களா இவர்கள்..?! எஸ்மா சட்டத்தின் படி அரசு ஊழியர்களை பெண்களை சிறையில் அடைத்து மாதக்கணக்கில் வாட்டிய ஜெயலலிதாவின் வழி வந்தவர்கள் இவர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிப்பதும்… அதை இவர்கள் நம்புவதும் வேடிக்கை தம்பி..!

இதே அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 1989இல் ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கியவர் கலைஞர். அதற்கு முன்பாக வெறும் ஐயாயிரத்திற்கு கிழே இருந்த ஆசிரியர்களின் ஊதியத்தை ஒரே கையெழுத்தில் பதினெட்டாயிரம் முதல் 45 ஆயிரம் வரை உயர்த்தியவர் கலைஞர்.

அரசு ஊழியர்கள் திடீரென இறந்து விட்டால் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் வழங்குவது, குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை இதையெல்லாம் செய்தது கலைஞரே..!

ஆண்டுக்கொரு முறை 15 நாள் ஈட்டிய விடுப்பை அரசுக்கு சரண்டர் செய்து காசாக்கும்திட்டத்தைகொண்டுவந்ததும்கலைஞரே..!

திருமணக் கடன், வாகனக் கடன், வீடு கட்ட கடன் ஆகியவை அரசு ஊழியர்களுக்கு வழங்கியதும் கலைஞரே..!

முதன் முதலாக 1990 முதல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே வேலை என்ற திட்டத்தை கொண்டு வந்ததும் கலைஞரே..!

மருத்துவ விடுப்பு அரை சம்பளத்தில் 6 மாதங்களாக என்றிருந்ததை முழு சம்பளத்தோடு 18 மாதங்களாக உயர்த்தி வழங்கியதும் கலைஞரே..!

2 லட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவு பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கியதும் கலைஞரே…!

சத்துணவு மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களுக்கு குடும்பநல பாதுகாப்பு திட்டம் தந்ததும் கலைஞரே..!

சத்துணவு பெண் பணியாளர்களுக்கு பிரசவ விடுப்பு அனுமதித்ததும் கலைஞரே..!

2006-11 கழக ஆட்சியில் 45 ஆயிரம் தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கி நிரந்தரம் செய்ததும் கலைஞரே..!

6வது சம்பளக் குழுவில் அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 11 ஆயிரத்து 93 கோடி ரூபாய் நிலுவைத் தொகையாக அனுமதிக்கப்பட்டு ரொக்கமாக வழங்கி அரசு அலுவலர் வாழ்வில் புதிய வரலாறு படைத்ததும் கலைஞரே..!

விடுப்பு ஊதியத்தை கணக்கிட 12 மாத சராசரி ஊதியம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். என்பதை தளர்த்தி 10 மாதமாக குறைத்து அதையும் நீக்கி கடைசி மாதம் பெறும் ஊதியத்தையே வழங்கியதும் கலைஞரே…!

ஓய்வு பெறும்போது அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 14 மாத சம்பளம் எனும் பணிக்கொடை 2.5.74 முதல் 16 மாதங்களாக பின்னர் அதிகப்படியாக 161/2 மாதங்களாக உயர்த்தி யதும் கலைஞரே…!

பேருந்துகளை அரசுடமையாக்கி… 1.5 லட்சம் தொழிலாளர்கள் தனியார்களிடம் கொத்தடிமைகளாக வேலை பார்த்து வந்ததை, அரசு போக்குவரத்து ஊழியர்களாக்கியதும் கலைஞரே…!

அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளும் தற்போது பெற்று வரும் நிலை உள்ளது. தாங்களும் அரசு ஊழியர்களே என அவர்கள்சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ முடி கிறது… அதற்கு காரணமும் கலைஞரே…!


இவை அனைத்துமே வெறும் சாம்ப்பிள்கள் தான்..! இன்னும் எழுதுவதற்கு பக்கங்கள் போதாத அளவிற்கு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கலைஞரின் தி.மு.க. அரசு செய்த சாதனை பட்டியல்கள் நிறைய இருக்கின்றன.

இவை அனைத்துமே இன்று வரை 23 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த தி.மு.க. ஆட்சிக் காலங்களில் செய்யப்பட்ட சாதனைகளே..! ஆனால் 31 வருடம் ஆட்சியில் இருந்த அ.தி.மு.க., அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் செய்த தீங்குகளைத் தவிர வேறு நல்ல திட்டங்களை எந்த ஒரு அரசு ஊழியரோ, ஆசிரியரோ இங்கே பட்டியலிட முடியுமா தம்பி..?!


1990க்கு முன்பிருந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நிலையை அப்படியே தலை கீழாக திருப்பிப் போட்டு உச்சத்தில் கொண்டு வைத்திருப்பது தி.மு.க. ஆட்சிகளே….

அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அன்னையாக இருந்து அரணாக காத்தது தி.மு.கழக அரசு மட்டுமே..! ஆகவே எதிரிகள் யார் என்பதை புரிந்து கொண்டு நம்பிக்கை வைத்து பொறுமை காத்திட வேண்டும்…!

மாறாக ஓநாய்களின் ஓலத்திற்கு காது கொடுத்தால்… அதன் வயிற்றுக்கு இரையாக வேண்டிய நிலை தான் ஏற்படும்..!




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி மற்றும் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அணிகளின் சார்பில் தலைவர் கலைஞர் 100 ஆண்டு விழா சிறப்பு கருத்தரங்கம் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ தளபதி தலைமையில் சிறப்பு பேச்சாளர் நாஞ்சில் சம்பத் சிறப்புரை ஆற்றினார். முன்னிலை மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன், மாநில கழக நிர்வாகிகள், விர.கணேசன், சேவுகபெருமாள், நேருபாண்டியன் பகுதி செயலாளர் அறிவு நிதி வரவேற்புரை ஏ.எம்.கேபிள் கண்ணன் வி.முனியசாமி திராவிடமாரி, காமராஜ், டிவி அழகர். எம் ஆழ்வார், தலைமைக் கழக மாநில நிர்வாகிகள் பொன் முத்து ராமலிங்கம், பெ.குழந்தைவேலு. மாவட்டக் கழக நிர்வாகிகள் தனசெல்வம், மேயர் இந்திராணி, பொன் வசந்த், ஒச்சுபாலு, மூவேந்திரன், ராகவன், சின்னம்மாள் முருகவேல், மாநில அணிகளின் துணைசெயலாளர்கள், ஆக்ரி கணேசன், ஆர்.கணேசன், பாக்கியநாதன், பொதுக்குழு உறுப்பினர் வைகை பரமன், இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜான் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலைச் சேர்ந்த மீனவர் ஆன்றோ, பயஸ் உள்ளிட்ட 16 பேர், குளச்சல் துறைமுகத்தில் இருந்து கடந்த 25ம் தேதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் ஆழ் கடலில் மீன்பிடித்து கரை திரும்பிய போது, 28 ம் தேதி தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு அருகே அவர்களின் படகு கடலில் மூழ்கியது. இந்த விபத்தில் கொட்டில்பாடு கிராமத்தைச் சேர்ந்த பயஸ், குளச்சல் ஆரோக்கியம், ஆன்றோ ஆகியோர் மாயமாகினர். இந்நிலையில் 29ம் தேதி, கொட்டில்பாடு கிராமத்தைச் சேர்ந்த பயஸ் உடல் மீட்கப்பட்டது. இந்நிலையில் மீனவரணி மாநில செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின், கொட்டில்பாடு கிராமத்தைச் சேர்ந்த பயஸ், குளச்சல் ஆரோக்கியம், ஆன்றோ ஆகியோரின் குடும்பத்திற்குச் சென்று ஆறுதல் தெரிவித்தார். மேலும் மீனவரணி சார்பில் ஒவ்வொரு மீனவரின் குடும்பத்திற்கும் தலா ஒரு லட்ச ரூபாய் நிவாரணத் தொகையையும் வழங்கினார். மேலும் அவர்களின் மகள்களின் பட்ட மேற்படிப்பிற்கான கல்வி செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்வதாக மீனவரணி மாநிலச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் உறுதியளித்தார். நிகழ்ச்சியில் மீனவரணி நிர்வாகிகள், விசைப்படகு சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.



சிவகங்கை மாவட்ட தி.மு.க.பொறியாளர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு காளையார்கோவிலில் நடைபெற்ற பொறியாளர் மாணவர்கள் பங்கேற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்களை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாநில பொறியாளர்அணிஇணை செயலாளர் பிரதீப், மைக்கேல்கல்லூரி தலைவர் ஸ்டாலின் ஆரோக்கியராஜ்,மாவட்டபொறியாளர் அணி அமைப்பாளர் முருகப்பன்,மாவட்ட தலைவர் ரவி,துணைதலைவர்அமீர்பாதுஷா,துணை அமைப்பாளர் மணிகண்டன், ஆகியோர் உள்ளார்கள்.

## இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் இன்று மோதல்!

சென்னை, அக். 8 -

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான போட்டி இன்று சென்னையில் நடைபெறுகிறது. இதற்கான பாதுகாப்பு பணியில் முதல் முறையாக ட்ரோன்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

உலகக் கோப்பை கிரிக்கெட் (50 ஓவர்) போட்டியில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 5 முறை சாம்பியனான ஆஸ்திரேலியாவை இன்று (அக்.8) சென்னையில் சந்திக்கிறது. சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ சிதம்பரம் மைதானத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் இப்போட்டியை காண ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர். டிக்கெட்கள் பெரும்பாலும் விற்று தீர்ந்து விட்டன.



மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வட்டார வணிக வள மையம் மூலம் திருவெறும்பூர் பகுதியைச் சேர்ந்த மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் 80 பேருக்கு 40 லட்ச ரூபாய் நிதியை தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார். திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் தலைமை வகித்தார். இந்த விழாவில் தமிழ்ச்செல்வி, மகளிர் வட்டார இயக்குனர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற

# 1200 மாணவ - மாணவியருக்கு பல்வேறு நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார்!

சென்னை, அக்.8-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று பல்வேறு நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ள 1,200 மாணவ, மாணவி யருக்கு பணி நியமன ஆணைகளை நேற்று முன்தினம் (6.10.2023) கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் அனைவரும், இன்றைய தொழில் துறைக்கு தேவையான நவீன திறன்களை கற்றுணர்ந்து அவர்களது துறைகளில் சிறந்த வேலைவாய்ப்புகளை பெற்று வெற்றிபெற ஏதுவாக முதலமைச்சர் அவர்களால் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவங்கி வைக்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டம் தான் நான் முதல்வன் திட்டம். இத்திட்டம் தொடங்கிய முதல் ஆண்டில் 13 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாம் ஆண்டில் 15 இலட்சம் மாணவர்களுக்கு பயன ளித்தும் வெற்றிகரமாக பயணித்துக் கொண்டுள்ளது.

துறைவாரியாக ஒவ்வொரு பட்டப்படிப்பிற்கும் ஏற்ற திறன்சார்ந்த கல்வி பாடங்களை உயர்கல்வியில் இணைத்து புதுமை படைத்து வரும் திட்டமே நான் முதல்வன் திட்டம். இத்திட்டம் பொறியியல் கல்லூரிகளில் துவங்கி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு விரிவுபடுத்தப் பட்டு பின்னர் இந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நடைபெற்ற முதலாம் ஆண்டு வெற்றி விழாவில் முதலமைச்சர் அவர்களால் பாலிடெக்னிக் மற்றும் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் பயன்பெரும் நிலையில் இத்திட்டம் விரிவுபடுத்தப் பட்டது என்பது குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியாகும்.

மாணவர்களுக்கான திறன் பயிற்சி, ஆசிரியர்களுக்கான பயிற்றுவிப்பு திறன் பயிற்சி, மொழித்திறன் பயிற்சி, மென்திறன் பயிற்சி, திட்ட செயல்முறை பயிற்சி, என பல்வகையான பயிற்சிகளால் மாணவர்களை மேம்படுத்தும் திட்டமாக செதுக்கி பன்முகத்தன்மை கொண்டது இத்திட்டம்.

நான் முதல்வன் திட்டம் தொடங்கி முதலாம் ஆண்டு இறுதியில் 2022 மார்ச் முதல் மே மாதம் வரை கல்லூரி வளாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு அதிக மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து வருடந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் உள்ளன.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்று முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்கு பணி ஆணைகள் வழங்கும் விழாவில் 1200 மாணவ, மாணவியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி உரையாற்றினார்.

**மூன்று குழுக்களுக்கு பரிசுத் தொகை!**

விழாவில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், TCS, Sales Force, TVS, FOXCONN, Sutherland, Tech Mahindra, Ashok Leyland, Sundaram Brake linings, Unitech, போன்ற பல முன்னனி நிறுவனங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர்களுக்கு பணி ஆணைகளையும், IIT மும்பை, நிறுவனத்தினால் Mapathons Championship போட்டியில் வெற்றி பெற்ற 3-குழுவிற்கு பரிசுத் தொகையாக தலா ரூபாய். 10 ஆயிரத்தினையும் வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் TCS Ion, IIT Pravartak Technologies Foundation, Coca Cola போன்ற முன்னணி நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்திற்கும் இடையே உயர்கல்வி வழிகாட்டுதல், ஆங்கில மொழித் திறன் வளர்த்தல், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் திறன் பயிற்சி வழங்குதல் ஆகிய வைகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது.

GUVI Geek Network நிறுவனத்தினால் Tamil Nadu Coders Premier League துவக்கி வைக்கப் பட்டது. மேலும், Cambridge நிறுவனத்தால் மாணவர்களின் ஆங்கில மொழித் திறன் கற்றலுக்கென பிரத்யேகமாக தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, CII அமைப்பின் தமிழ்நாடு தென்னிந்திய பிரிவின் தலைவர் சங்கர்வானவராயர், நான் முதல்வன் திட்ட முதன்மைச் செயல் அலுவலர் ஜெயபிரகாசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூர் மாவட்டக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம்!

## திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், அக். 8 -

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (8.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் ஜோலார்பேட்டை ஶ்ரீராஜ ராஜேஸ்வரி மஹாலில் பொதுப் பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனை படி, மாவட்டக் கழக அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய,

பேரூர்க் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்டச் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 1. டிசம்பர் 17 சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாடு குறித்து,

2. அக்டோபர் 14 சென்னையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாடு குறித்து,

3. BLA 2 மற்றும் BLC (பாக முகவர்கள், வாக்குச் சாவடி முகவர்கள்) பணிகள்,

4.வாக்காளர்கள் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் பணிகள்,

5.கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து,

6. கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

### அண்ணா பேருந்து நிலையம் - ‘ஸ்டெம் பார்க்’ உள்ளிட்ட முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா! கோவில்பட்டியில்

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் கே.என். நேரு - கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, அக். 8-

அக்டோபர் - 8 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள அண்ணா பேருந்து நிலையம், ஸ்டெம் பார்க் உள்ளிட்ட முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா மற்றும் கோவில்பட்டியில் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் கே.என்.நேரு, கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் பங்கேற்கின்றனர் எனவடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-



தூத்துக்குடியில் இயங்கி வந்த அண்ணா பழைய பேருந்து நிலையமானது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ரூ.57 கோடியிலும் அம்பேத்கார் நகரில் ரூ. 29 கோடியில் ஸ்டெம் பார்க்கும் (STEM PARK) புதிதாக கட்டப்பட்டுள்ளதை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்திடவும், ரூ.87 கோடி மதிப்பில் பல்வேறு கழிவுநீர் கால்வாய் பணிகள் துவக்கி வைக்கப்படவும் உள்ளது. அதுபோல மீன்வளத்துறை சார்பில் ரூ.9 கோடி மதிப்பில் மீன் ஏலக்கூடமும், பொதுப்பணித்துறை சார்பில் கழுகுமலை எட்டையபுரத்தில் ரூ.5.63 கோடி மதிப்பில் சார் பதிவாளர் கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது. மேலும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.75 கோடி மதிப்பில் மாவட்டத்தின் பல் வேறு இடங்களில் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி, சமுதாயநலக் கூடம் ஆகிய பணிகள் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

இன்று (அக்டோபர் - 8 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி அண்ணா பழைய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் தி.மு.கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வள்ர்ச்சித்துறை அமைச்சருமான கே.என்.நேரு, தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றுகிறார்கள்.

அன்றைய தினம் மதியம் 1.00 மணி அளவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவில்பட்டி சத்தியபாமா திருமண மண்டபத்தில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஏழைய - எளிய பெண்கள் 125 பேருக்கு ரூ.10 லட்சம் மதிப்பில் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

எனவே அனைத்து நிகழ்ச்சிகளிலும் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தலைமை கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாக கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சிங்கம்புணரி அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தொடக்கி வைத்து பள்ளிக்கும் மாணவ, மாணவிகளுக்குமான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### மோடி அரசின் வாய்ப்பந்தல் - பொருளாதாரத்தில் பெரிய ஓட்டை!

# 2025க்குள் 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எப்படி எட்ட முடியும்?

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, அக். 8 -

மேக் இன் இந்தியா மூலம் இந்தியா வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற மோடியின் வாய்ப் பந்தலில் பெரிய ஓட்டை விழுந்திருக்கிறது எனவும் முக்கிய துறைகளின் உற்பத்தி கடும் வீழ்ச்சியடைந்திருப்பதால் 2025க்குள் 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எப்படி எட்ட முடியுமென ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.



தீக்கதிர்

2023 அக்டோபர் 7 சனிக்கிழமை

வாய்ப்பந்தல் பொருளாதாரம்!

பிரதமர் மோடி 2025க்குள் இந்தியா 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்டும் என மார்தட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால் நிலைமையோ தலைகீழாக இருக்கிறது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருகிறது. கடந்த புதன்கிழமையன்று ரூ.83.24 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. தனிநபர் ஜிடிபி வளர்ச்சியில் இந்தியா 142 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மோடி பிரதமரானால் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 40க்கு வந்து விடும் என ஶ்ரீ ஶ்ரீ ரவிசங்கர் துவங்கி பலரும் பல்லக்கு தூக்கினர். அவர்கள் எல்லாம் தற்போது இந்தியாவில்தான் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. நரேந்திர மோடி முதல்வராக இருந்த

அது வருமாறு: -

பிரதமர் மோடி 2025க்குள் இந்தியா 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்டும் என மார்தட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால் நிலைமையோ தலைகீழாக இருக்கிறது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வரு கிறது. கடந்த புதன்கிழமை அன்று ரூ.83.24 ஆக வீழ்ச்சி யடைந்திருந்தது. தனிநபர் ஜிடிபி வளர்ச்சியில் இந்தியா 142 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மோடி பிரதமரானால் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 40க்கு வந்து விடும் என ஶ்ரீ ஶ்ரீ ரவிசங்கர் துவங்கி பலரும் பல்லக்கு தூக்கினர். அவர்கள் எல்லாம் தற்போது இந்தி யாவில்தான் இருக்கிறார்களா என்று தெரிய வில்லை. நரேந்திர மோடி முதல்வராக இருந்த போது 2013ஆம் ஆண்டு தனது டிவிட்டர் பக்கத்தில், “டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்ததற்கு தில்லியிலிருந்து ஆளும் அரசின் ஊழல்கள் தான் காரணம்”எனப் பதிவிட்டிருந்தார். இப்போது வீழ்ச்சியடைந்து வருவதற்கு எந்த ஊழல் காரணம் என மோடி விளக்குவாரா?

தற்போதைய ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் ஸ்மிருதி இரானி 2013ல் தனது டிவிட்டர் பக் கத்தில், “சீன ஊடுருவல், பெட்ரோல் விலை ஏற்றம், ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, 60% இந்தியர்கள் உணவிற்காக போராடும் போது, இதை மறைக்கக் காங்கிரஸ் மதச்சார்பின்மை குறித்துப் பேசி வருகின்றது” எனப் பதிவிட்டிருந்தார். இப்போது மேற்சொன்ன விஷயங்கள் அனைத்தும் என்ன லட்சணத்தில் இருக்கிறது என ஸ்மிருதி இரானி விளக்குவாரா?

2014ஆம் ஆண்டில் இந்தியாவின் கடன் ரூ.55 லட்சம் கோடியாக இருந்தது. 2014க்கு முன்பு இந்தியாவை 67 ஆண்டுகளாக 14 பிரதமர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். அந்த 67 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த கடன் ரூ.55 லட்சம் கோடி. ஆனால், 2014க்கு பின் கடந்த 9 ஆண்டு கால மோடி ஆட்சியில் இந்தியாவின் கடன் 172 லட்சம் கோடியாக அதிகரித்திருக்கிறது. சுமார் இரண்டரை மடங்கு அதிகரித்ததற்கு யார் பொறுப்பு?

மோடியின் பொருளாதாரப் பொய்களுக்கும் களஎதார்த்தத்திற்கும் உள்ள இடைவெளி மலைக்கும் மடுவிற்குமானதாக இருக்கிறது. அரசு தனியார் முதலீடு அதிகரிக்கிறது; மேக் இன் இந்தியா மூலம் இந்தியா வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற மோடியின் வாய்ப்பந்தலில் பெரிய ஓட்டை விழுந்திருக்கிறது. மேக் இன் இந்தியா 72.5 சதவிகிதமும், அரசு மற்றும் தனியார் முதலீடு 79.2 சதவிகிதமும் வீழ்ச்சியடைந்திருக்கிறது.

அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தந்து கொண்டிருக்கும் ஆயத்த ஆடைகள், கடல் பொருட்கள், பிளாஸ்டிக், ஆபரணங்கள், செயற்கை கற்கள் உள்ளிட்ட துறைகளின் உற்பத்தி கடும் வீழ்ச்சியடைந்திருக்கிறது. இதில் எப்படி 2025க்குள் 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்ட முடியும் ?

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விருதுநகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வி.வி.எஸ். திருமண மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழாவை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் நடத்தி வைத்தார். இதில் 150க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்பட்டது.



கலைஞர் 100
1924 – 2023
நாள் : 08.10.2023
காலை 11.00 மணி
எழும்பூர் சட்டமன்ற தொகுதி
108 வது வட்டம்
வேம்புலி அம்மன் கோவில் தெரு
தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட
மேம்பாட்டு வாரியத்தின் சார்பில்
25.78 கோடி ரூபாய் திட்ட
மதிப்பீட்டில் அடுக்குமாடிக்
குடியிருப்பினைக் கட்டும்
திட்டப் பணிக்கு
அடிக்கல் நாட்ட
வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும்
சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்
அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மத்தியசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர்
மண்டல குழு தலைவர்கள், எழும்பூர் தொகுதி
உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக மாநில
மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக – வட்ட
கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,
கழக முன்னோடிகள் ஆகியோரை
வருக ! வருக ! என வரவேற்கும்
அன்பன்
வழக்கறிஞர் இ.பரந்தாமன் B.A.,B.L.,MLA
எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் / கழக சட்டத்துறை இணைச் செயலாளர்

# கலைஞரும் நானும் 39

**“குத்தூசி அவர்கள் மூலம் அறிமுகமான இளம் நண்பர். வாழ்க!, என வாழ்த்தி என் எழுத்துகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தியவர் கலைஞர்” எனத் தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் மூத்த பத்திரிகையாளர் மணா.**

■ **மணா,** பத்திரிகையாளர்



## “ஒரு முதலமைச்சர் பத்திரிகையாளருக்காகக் காத்திருக்கார்!”

“கலைஞரைப் போல சிந்தனை, செயல்வேகம் கொண்டவர்களை உலக வரலாற்றில் எங்குமே பார்க்க முடியவில்லை. அவருடன் நெருங்கிப் பழகும்வரை எல்லைக்கோடு இருக்கும். அவருக்குப் பிடித்தமானவராக மாறிவிட்டால், எல்லைக்கோடுகளை அழித்துவிடுவார். பத்திரிகையாளர் என்கிற நிலையில் இருந்து அணுகத் தொடங்கி, அவரது நெருங்கிய வட்டத்தில், நினைத்த நேரத்தில் பார்க்கக்கூடிய, பேசக்கூடிய வட்டத்தில் என்னை வைத்திருந்தார். அதற்குக் காரணம் நம்பிக்கை. அந்த நம்பிக்கை சாதாரணமாக உருவாகாது. அதற்கும் அவர்தான் வழிகொடுப்பார்.

பிரபல வார இதழில் **‘நதி மூலம்’** என்கிற தொடரை எழுதியபோது, கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை எழுத திருக்குவளைக்கும், திருவாரூருக்கும் சென்று வந்தேன். அதை நூலாகத் தொகுத்தபோது கலைஞர் முதல்வராக இருந்தார். அந்த நூலை அவரிடம் கொடுக்கச் சென்றபோது, நூலைப் பிரித்து அவரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தைப் படித்தவர், கையில் எத்தனை காப்பி இருக்கு எனக் கேட்டு, இருந்த ஐந்து காப்பிகளையும் வாங்கிக் கொண்டார். அது அவர் அன்பின் உடனடி வெளிப்பாடு.

### தேவையைத் தாண்டியும் பகிர்வுகள்

கலைஞரை நேர்காணல் செய்ய வேண்டும் என்றால் முழுத் தயாரிப்புடன் செல்லவேண்டும். அரசியல், பொதுவாழ்க்கை, சொந்த வாழ்க்கை என எந்தக் கேள்வியையும் கேட்கலாம். எதற்கும் தயக்கம் இருக்காது. ஒருமுறை முன் தயாரிப்புகளோடு சென்றேன். கேள்விகளைப் பார்க்கலாமா எனக் கேட்டு வாங்கிப் பார்த்தார். எல்லா கேள்விகளுமே அவரை விமர்சனப்பூர்வமாக அணுகக் கூடிய கேள்விகள்.

எல்லாவற்றுக்கும் பதில் அளித்துவிட்டு, இறுதியாகச் சிரித்துக்கொண்டே சொன்னார். “எப்படியாவது என்னை மாட்ட வைக்க வேண்டும் என்கிற கேள்விகளை நீங்க கேட்டீங்க, அதேபோல எப்படியாவது மாட்டக் கூடாது என்பதற்கேற்ப பதில்களை நான் சொல்லி இருக்கிறேன் போதுமா?” என்றார். அவ்வளவு வெளிப்படைத் தன்மை, ஒளிவு மறைவற்ற துணிவு எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியது.

**நினைத்த நேரத்தில் பார்க்கக்கூடிய, பேசக்கூடிய வட்டத்தில் என்னை வைத்திருந்தார். அதற்குக் காரணம் நம்பிக்கை. அந்த நம்பிக்கை சாதாரணமாக உருவாகாது.**

ஒரு நேர்காணல் செய்வதற்குச் சென்றால் பத்திரிகைத் தேவையைத் தாண்டி பல விஷயங்களைப் பகிர்வார். அவற்றை வாங்கிக்கொண்டு பரபரப்புச் செய்தியாக்காமல், சரியானதைச் செய்தால் போதும். அவருக்குப் பிடிக்கும். அதுபோல எந்தச் சூழலிலும் எப்படியான கேள்விகளைக் கேட்டாலும், நிதானமாகப் பொறுமையாகப் பதில் அளிப்பார்.

### இறுதிவரை ஒத்துழைத்த உடல்

மற்றொருமுறை பேட்டியின்போது, தனிப்பட்ட வகையில் அவரது உடல்நலம் குறித்த கேள்வி கேட்டேன். அந்தக் கேள்விக்கு அவர் அளித்த பதில்தான் அவரின் அசாத்திய ஆற்றலுக்குச் சான்று என்பேன். “கட்சியிலும், அதற்கு அப்பாற்பட்டும் உங்களுக்கு எவ்வளவோ நண்பர்கள், அதேபோலச் சிறுவயதில் இருந்தே உங்கள் அலைச்சலுக்கும், வேகத்துக்கும் ஈடுகொடுத்து வருகிற உங்கள் உடம்பை உரிமையுடன் நண்பனுக்குக் காட்டும் பரிவைப் போல கவனித்திருக்கிறீர்களா?” எனக் கேட்டேன்.

“உடம்புதான் என் வேகத்துக்கு ஒத்துழைக்க வேண்டுமே தவிர, நான் எப்படி உடம்புக்குப் பரிவு காட்ட முடியும். ஆனால், உடம்பைப் பராமரிப்பதில் கவனம் இல்லாமலும் இல்லை” என்றார். உண்மையில், கலைஞரின் இறுதிக் காலம் வரை அவரது உடம்பு அவருக்கு ஒத்துழைத்தது.

### தோளோடு தோள் வந்தார்

ஒருமுறை ஆலிவர் ரோடு இல்லத்தில் சந்தித்து விட்டு, அவர் கீழே வரும்போது நானும் சேர்ந்து வந்தேன். அப்போது, பக்கத்திலேயே வந்ததால், “உன் தோள் மீது கை வெச்சுக்கட்டுமாய்யா” என்றார். “அய்யா, இதுக்கு எல்லாமா அனுமதி கேட்பீங்க” என்றேன். “இருக்கட்டும்யா... உன் தோளில் கை வைத்துக் கொள்ள, உன்கிட்டதானய்யா கேட்க முடியும்” என்றார். எவ்வளவு உயரத்தில் இருப்பவர், எழுத்திலும் பேச்சிலும் ஆளுமையிலும் உச்சம் தொட்டவராக இருந்தாலும், வயதிலும் அனுபவத்திலும் சிறியவர்களாக இருப்பவர்களிடம் காட்டும் அணுகுமுறை கற்றுக் கொள்ள வேண்டிய பண்பு.

வெளியில் இருந்து ஒருவரைச் சந்திக்கிறார் எனில், முதலில் அவர்களைப் பேசவிடுவார். வெளி உலக நிலவரங்கள் அவருக்குக் கோப்புகளாக வந்தாலும், வெளி நிலவரம் எப்படி இருக்கிறது என்பதை, ஏதாவது ஒரு கேள்வி கேட்டு வாங்குவார். சுவாரஸ்யமாகப் பேசுபவர்கள் எனில், அவர்கள் பேசுவதை ரசிப்பார். நான் சந்திக்கச் செல்லும் ஒவ்வொரு முறையும் பேட்டியைத் தொடங்குவதற்கு அரை மணி நேரம், ஒரு மணி நேரம் ஆகும். அதுவரை நம்மைப் பேசவிட்டு விஷயங்களை வாங்குவார். தனக்கு அளிக்கப்படும் தகவல்களை நம்பவில்லை என்பது அதற்குக் காரணம் அல்ல, அந்தத் தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்காகக் கேட்பார். அவருடன் நெருங்கிய வட்டத்தில் உள்ளவர்களுக்கு இப்படியான நேரங்கள் வாய்க்கும்.

### முதலமைச்சரைக் காக்க வைத்தேன்

அவருக்குத் தாமதம் பிடிக்காது. அவர் சொல்லும் சரியான நேரத்துக்கு இருக்க வேண்டும். அவர் முதல்வராக இருந்தபோது, ஒருமுறை 8 மணிக்கு வந்துடுங்க என அழைத்திருந்தார். நான் புகைப்படக்காரருடன் சென்று சேர மூன்று நிமிடம் தாமதமாகிவிட்டது. “எல்லோரும் முதலமைச்சருக்காகக் காத்திருக்காங்க, ஆனால், ஒரு முதலமைச்சர் பத்திரிக்கையாளருக்காகக் காத்திருக்கார். எப்படிய்யா” என்றார் கொஞ்சம் கோபமாக. “அய்யா மன்னிச்சுடுங்க” எனச் சமாதானம் செய்து, பேட்டிகள் எடுத்தோம். அந்தப் பேட்டியின் முடிவில், அவருக்கு ‘ஜெயின்’ தொப்பியை அணிவித்து புகைப்படம் எடுத்தோம். அதை வெகுவாக ரசித்தார். கேமிரா கோணங்களும் அவருக்கு அத்துப்படி என்பதால், வெவ்வேறு கோணங்களில் படம் எடுக்க ஒத்துழைப்பு அளித்தார்.


மற்றொரு சந்தர்ப்பத்தில் அவரது பர்ஃபெக்ஷன் குறித்த கேள்வி எழுப்பினேன். “அய்யா, நீங்க இருப்பதுபோல மற்றவர்களிடம் அதே பர்ஃபெக்ஷன் எதிர்பார்ப்பது நியாயமா? அப்படி இருப்பார்கள் என நினைக்கிறீர்களா?” என்றேன். “ஆமாம்ய்யா, இருக்க மாட்டார்கள் எனத் தெரியும். நான் என் சிறு வயதில் இருந்தே பழகிக் கொண்ட விஷயம் என்னால் மாற்றிக் கொள்ள முடியாது. மற்றவர்களிடம் இல்லையென்று முடிவு செய்து, எதிர்பார்க்காமல் இருக்க முடியாது. இருந்தால் மகிழ்ச்சி, இல்லையென்றாலும் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால், நான் இருக்கும்வரை அப்படித்தான் இருப்பேன்” என்றார். அவர் இருக்கும்வரை அவரிடம் அந்த பர்ஃபெக்ஷன் இருந்தது. நேரம் தவறாமை, எடுத்த வேலையில் காட்டும் வேகம், சந்திப்புகள் என எல்லாவற்றையும் அவர் மிகச் சரியாகக் கையாண்டிருந்தார்.

முதலமைச்சராக இருந்த காலத்தில், ஒரு சந்திப்பின்போது கேள்வியைத் தாண்டியும் சில விஷயங்களைப் பகிர்ந்துகொண்டார். அப்போது டேப்பில் பதிவு செய்திருந்தேன் என்பதால், “அந்தப் பகுதி மட்டும் வேண்டாம், நீங்கள் பேட்டியைத் தயார் செய்து அச்சுக்கு அனுப்புவதற்கு முன், என்னிடம் காட்டி விடுங்கள்” என்றார். அடுத்த நாள் அவர் சட்டமன்றத்தில் இருந்த நேரத்தில் எடுத்துச் சென்றேன். வாங்கிப் பார்த்தவர் சரியாக இருக்கிறது எனப் பாராட்டினார்.

அந்தப் பேட்டியும் சந்திப்பும்தான் கலைஞரின் குட் புக்கில் என்னைக் கொண்டு சென்றது. அதற்கு முன்னர் அவரை இரண்டு பேட்டிகள் எடுத்திருந்தாலும், சின்னக்குத்தூசி அய்யா அறிமுகம் செய்துவைத்த பின்னர், எடுத்த முதல் பேட்டி அது. அன்று என் கட்டுரையைப் படித்து விட்டு, ‘குத்தூசி அறிமுகம் செய்த இளம் நண்பர்’ எனப் பாராட்டினார். அந்த நட்புப் பாராட்டலுக்குப் பின்னர், நான் பகிர்ந்து கொள்ள முடியாத பல நினைவுகளையும் ஒரு தந்தையைப் போல அளித்துச் சென்றுள்ளார் கலைஞர்..!”

...பகிர்வார்கள்

## அண்ணாவின் கதைகள் ஆங்கிலத்தில்...




சாமானியனைக் கதாபாத்திரமாக்கி அந்தப் பாத்திரத்தை ‘பகுத்தறிவு-சுயமரியாதை-சமூகநீதி’ அரசியலின் மையமாக உணரச்செய்வது திராவிட இயக்க எழுத்தாளர்களின் பாணி. இந்த வகை திராவிட இயக்க நவீன இலக்கிய எழுத்திற்குத் தலைமகனாகத் திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா, நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். மிக அதிகமாக **‘திராவிட நாடு’** இதழிலும், **‘காஞ்சி’** இதழிலும் சில கதைகள் பெரியாரின் **‘குடி அரசு’** இதழிலும் வெளியாயின. அவரது முதல் சிறுகதையான **‘கொக்கரக்கோ’**, 1934-ஆம் ஆண்டு **‘ஆனந்த விகடன்’** இதழில் வெளியானது.

கருத்தாழமும், இலக்கிய நயமும், அரசியல் நுணுக்கமும் நிறைந்த அண்ணாவின் 22 சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து, ஆங்கிலத்தில் ‘Help Me with This Tricky Case’ என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார் வி.ராமகிருஷ்ணன். தனது ஆங்கிலத் திறனால் நாடாளுமன்றத்தை அதிரவைத்த அண்ணாவின் கருத்துகள், சிறுகதை வடிவிலும் ஆங்கில வாசகர்களை எட்டுவது இந்திய ஒன்றியம், தற்சமயம் இருக்கும் நிலையில் அவசியமானது. தென்னாட்டுப் பெர்னாட் ஷாவின் கதைகள் திராவிட அரசியலை, சிறுகதைகள் வழியாக, ஆங்கில உலகுக்குக் கடத்தும் வாய்ப்பாகவும் இதைப் பார்க்கலாம்.

## :ப்ளாஷ்பேக்



### இந்தியா வெற்றி!

இந்திய கிரிக்கெட் அணி உலகக் கோப்பையை வென்ற ஏப்ரல் 2, 2011 அன்று காஞ்சிபுரத்தில் கழகத்துக்காக வாக்கு கேட்டுப் பிரச்சாரம் மேற்கொண்டேன். தலைவர் கலைஞரும் வேலூரில் பிரச்சாரத்தை முடித்துக்கொண்டு காஞ்சிபுரம் விருந்தினர் மாளிகைக்குத் திரும்பி இருந்தார். தலைவரைச் சந்திக்கக் காத்திருந்த சமயத்தில் இந்தியா வெற்றி பெற்றிருந்தது. உள்ளே சென்றதும் தலைவர், இந்தியா வென்ற மகிழ்ச்சியில் என்னைக் கட்டி அணைத்து வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டார். அதன் பிறகு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டது. நெருக்கடியான தேர்தல் பிரச்சாரத்துக்கு நடுவிலும் தலைவரை அவ்வளவு மகிழ்ச்சியாகப் பார்க்க நிம்மதியாக இருந்தது. என் வாழ் நாளில் மறக்க முடியாத புகைப்படம் இது.



போஸ் வெங்கட்

**-போஸ் வெங்கட், நடிகர் மற்றும் இயக்குநர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### முதல் தேர்தல் அறிக்கை!

**1957-ஆம் ஆண்டு பிப்ரவரி 10-ஆம் தேதி, தேர்தல் சிறப்பு மாநாட்டினை கழகம் நடத்தியது. அந்த மாநாட்டில்தான் கழகத்தின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில், “தி.மு.க தோன்றி, ஏழு ஆண்டுகள் கழிந்த பிறகு எட்டாவது ஆண்டு நடப்பில், முதன் முறையாகப் பொதுத் தேர்தலில் ஈடுபடுகிறது. இது கழகத்தின் வரலாற்றில் மட்டுமல்ல, நாட்டின் அரசியல் வரலாற்றிலும் ஒரு முக்கியமான கட்டமாகும். திராவிட நாட்டின் அரசியல் சுதந்திரத்தை உருவாக்கவும், சமதர்ம குடியரசைக் காணவும், சாதி முறைகேடுகளை ஒழித்து, சாதிகளற்ற ஒரு சமுதாயத்தைக் காணவும் தொடர்ந்து போராட கழகம் உறுதி பூண்டுள்ளது” எனத் தேர்தல் அறிக்கை முழங்கியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 263




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.